
தமிழ் நாட்டு ரசிகப் பொது மக்களுக்
"எங்கள் வணக்கம்"
விரைவில்
உங்கள் ஆசியைப்பெற
கிரீன் பிக்சர்ஸ்
"நாக விஜயத்தில்"
சந்திக்கிறோம்.



ஏஜண்டுகள்:—ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், தைலியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா, பேர்ஹாம்பூர் & சிகந்தராபாத்; கிரிஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி.

சிலோன் ஏஜண்டுகள்:—M. O. A. கனி & கோ., 96, சதாம்ஸ் ரோடு, கோட்டை, கொழும்பு

கட்டைபோல் விரைத்த முழங்கால்

நடக்க முடியாது கஷ்டப்படும் நடுத்தர வயதுள்ள மனிதர்

க்ருஷன் சாப்பிட்ட பிறகு ஒவ்வொரு தினமும் 14 மைல்கள் நடக்கிறார்

எக்ஸ்ரே எடுத்துப் பரிசோதித்து அந்த மனிதரின் முழங்காலில் ஒரு கெடுதலுமில்லை என்று கண்டுபிடித்த போதிலும், அவரது முழங்கால் விரைப்பாகவும் வலித்துக்கொண்டும்தானிருந்தது பிறகு க்ருஷனைப் பற்றி கேள்வியுற்ற அவர் ஒரு பாட்டில் க்ருஷனைச் சாப்பிட்டு முடிக்கு முன்னமேயே அவரது முழங்காலிலிருந்த விரைப்பு நீங்கியது. அவர் எழுதுகிறார்:-


"சில வருஷங்களுக்கு முன், என் முழங்கால் இணைப்பில் வலி கண்டு பிறகு விரைத்துவிட்டது. மூன்று மாதங்களுக்கு வைத்தியம் செய்து கொண்டேன். என்னால் நடக்கக்கூட முடியவில்லை. அவ்வளவு வேதனையும் வலியும். எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததில் முழங்காலில் எவ்விதக் கெடுதலும் இல்லை என்று தெரிந்தது. க்ருஷன் சால்ட்ஸைப் பற்றிக் கேள்வியுற்று, ஒரு பாட்டில் வாங்கினேன். அந்த பாட்டிலிலிருந்ததில் ஒரு பகுதி அருந்திய பின்னேயே முழங்காலிலிருந்த அந்த விரைப்பு நீங்கியது. ஆகையால் ஒவ்வொரு காலையிலும் நான் க்ருஷன் சாப்பிட்டு வருகிறேன். நான் நடுத்தர வயதினனாக இருந்த போதிலும் பிரதி தினமும் 12 முதல் 14 மைல்கள் வரை என்னால் நடக்க முடியும்."—ஏ.எம்.

முடக்கு வாதம் பொதுவாக இரத்த ஓட்டத்தில் விஷக் கலப்பு இருப்பதால் உண்டாகிறது. உங்கள் இரத்த ஓட்டத்தை சுத்தப்படுத்தி விட்டால் விஷ சந்துக்கள் கீல்களில் ஐக்யமாக முடியாது.

இதுதான் க்ருஷன் செய்யக்கூடிய உதவி! பல்வேறு உப்பு தாதுக்களின் திட்டமான சேர்க்கைதான் 'க்ருஷன்'. ஜீரண சக்தியையும்—மூத்திர விசர்ஜனத்தையும் அதிகமாக்குகிறது. மேற்படி இருவித சக்தியுள்ளதால் உடல் முழுவதிலுமுள்ள கோளாறுகளையும் நீக்கி விடுகிறது.

எல்லா வியாபாரிகளிடமும், கெமிஸ்டுகளிடமும் 'க்ருஷன் சால்ட்ஸ்' பாட்டில் ஒன்று ரூ. 1-10-0 வீதம் கிடைக்கும்.

BC-1


VINOLIA
WHITE ROSE SOAP
காலை வேளையில் ஒரு இந்திய ரோஜா தோட்டத்திலேற்படக் கூடிய குதூகல உணர்ச்சியை வினோலியா ஒயிட் ரோஸ் சோப் உங்களுக்குத் தருகிறது. இச் சோப்பின் மிருதுவான செழிப்பாயுண்டாகும் நுரை மிகவும் நேர்த்தியான சருமத்தையும் ஒழுங்காக சுத்தம் செய்கிறது—மேலும் அதன் நறுமணம் உங்களைச் சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச் செய்கிறது. உங்கள் அழகை அதிகப்படுத்த இச் சோப்பைவிட மேன்மையானதோ, தகுதியானதோ வேறு கிடையாது. வினோலியா ஒயிட் ரோஸை உங்கள் இஷ்டத்திற்குரிய சோப்பாகக் கொள்ளுங்கள்.
வினோலியா ஒயிட் ரோஸ் சோப்
VWB. 19-23 TM
VINOLIA CO., LIMITED, LONDON, ENGLAND

கல்கி
பொருளடக்கம்

மலர் 6
இதழ் 45

1947 ஜூன் 8

சர்வஜித்ஸு
வைகாசி 25

சென்ற இரண்டு ஆண்டுகளில் தமிழ் நாடு பல துரதிர்ஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. ஆனாலும் சில அதிர்ஷ்டங்களையும் அடைந்திருக்கிறது. தமிழ் நாடு அடைந்திருக்கும் அதிர்ஷ்டங்களுக்குள்ளே சிறந்த அதிர்ஷ்டம் சென்னைச் சட்ட சபையின் அக்கிராசன பதவிக்கு ஸ்ரீ ஜெ. சிவசண்முகம் பிள்ளை தேர்ந்தெடுக்கப்பட்டதாகும்.

ஸ்ரீ சிவசண்முகம் அவர்கள் எம். ஏ. பட்டம் பெற்ற உடனே அவருக்கு பிரிட்டிஷ் சர்க்கார் டிபுடி கலெக்டர் உத்தியோகம் கொடுக்க முன் வந்தார்கள். தேடி வந்த உத்தியோகத்தை ஸ்ரீ சிவசண்முகம் உதறித் தள்ளினார். "அடக்கி ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் என் ஏழைச் சமூகத்துக்குத் தொண்டு செய்வேன்" என்று உறுதி கொண்டார். அதுமுதல் அந்தத் திருப்பணியை இடைவிடாமல் செய்து வருகிறார். சென்னை நகரத்தின் மேயர் பதவி வகித்தாலும், சென்னை மாகாணச் சட்ட சபைத் தலைவர் ஆனாலும் தம் எளிய சமூகத்தினரை அவர் மறப்பதில்லை.



சென்ற மே மாதத்தில் ஸ்ரீ ஜெ. சிவசண்முகம் தென் பாண்டி நாட்டிலுள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களுக்குச் சுவாமி தரிசனம் செய்யச் சென்றார். வழியில் பல இடங்களில் ஹரிஜன சமூகத்தார் அவரை வரவேற்று உபசரித்தார்கள். தங்கள் குறைகளையும் எடுத்துச் சொன்னார்கள். குறைகளுக்குப் பரிகாரம் தேடும் வழிகளை அவர்களுக்கு ஸ்ரீ சிவசண்முகம் எடுத்துக் கூறினார். அதோடு தம் பேச்சினாலும் செயலினாலும் ஹரிஜனங்களுக்கு ஹிந்து சமயத்தில் அழியாத பற்றையும் உண்டாக்கினார்.

ஹரிஜன சேவைக்காகச் சென்னை மாகாண சர்க்கார் பற்பல திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். அவை எல்லாவற்றிலும் தலைசிறந்த திட்டம் ஒன்றை அவர்கள் கடைப்பிடிக்கலாம். சட்டசபை கூடாத சமயங்களிலெல்லாம் நமது சட்ட சபைத் தலைவரை இம்மாகாணத்தில் சுற்றுப் பிரயாணம் செய்யும்படி கேட்டுக் கொண்டால், அதைக் காட்டிலும் ஹரிஜனங்களுக்கு நன்மை பயக்கக்கூடிய திட்டம் வேறு ஒன்றுமேயில்லை.

பரம பக்தர் ஸ்ரீ சிவசண்முகம் பழனி ஆண்டவரைத் தரிசிக்கச் சென்றபோது பழனி மலைமீது எடுத்த படம் நமது அட்டையை அலங்கரிக்கிறது. சட்ட சபைத் தலைவருக்கு ஒரு பக்கத்தில் திருநெல்வேலி தேச பக்தர்களான ஸ்ரீ சோமயாஜுலு, ஸ்ரீ மேகநாதன், ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் ஆகியவர்களும், மற்றொரு புறத்தில் பழனி ஹரிஜனப் பிரதிநிதி ஸ்ரீ பாலகிருஷ்ணன் எம். எல். ஏ., பழனி தாலுகா காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ லக்ஷ்மிபதிராஜு, ஸ்ரீ காமாட்சி செட்டியார் எம். எல். ஏ. ஆகியவர்களும் நிற்பதைக் காணலாம்.



HT. 124
என்றால்
ஜி.என்.பி
ஆஸ்தான வித்வான்
ஜீ.என். பாலசுப்ரமண்யம் அவர்களின்
இணையில்லா புதிய இசைத்தட்டு
என்று அர்த்தம்
HT 124
நல்ல சகுனம்
ஷண்முகப்ரியா
கருணாலய நிதியே
ஹிந்தோளம்
கும்பகோணம்
ராஜமாணிக்கம் பிள்ளை
பாலககாடு மணி ஐயர்
"HIS MASTER'S VOICE"
"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 45

என்ன சேதி?

தாண்டவ தரிசனம்

சென்னை சர்க்கார் வகுத்த ஆலயப் பிரவேசச் சட்டம் ஜூன் மாதம் 2-ம் தேதி அமுலுக்கு வந்த பிறகு, இதுவரை திறக்கப் படாத சில கோவில்களின் கதவுகள் கூட, அலிபாபா கதையில் வரும் மாயக் கதவு போலப் படார் படாரென்று திறந்து கொண்டு வருகின்றன.

அவ்வாறு திறக்கப்பட்ட கோவில்களிலே சிதம்பரம் ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக் கோவிலும் ஒன்றாகும். சைவ சமயக் குரவர்களாலும் தமிழ் நூல்களாலும் புகழ்ந்து பாராட்டப்பட்ட கோவில்; சிற்றம்பலத்திலே நடனமாடும் அமரர் பெருமான், பக்த மணியாகிய நந்தனுக்குக் காட்சி யளித்து, அதன் மூலம் பெருமை பெற்ற கோவில் சிதம்பரம் கோவில். அன்றைய தினம், "வழி மறைத்திருக்குதே மலைபோலே" என்று உளக்குழைந்து மனம் நெகிழ்ந்து பாடிய நந்தனுக்குக் காட்சி தர விரும்பி, "சற்றே விலகியிருக்கும்" படியாக நந்தி பகவானுக்கு ஆணையிட்டுவிட்டு நந்தனுக்குத் தரிசனம் தந்து அழியாப் புகழ் பெற்றார் பொன்னம்பலனார். பின்பு, நூற்றுக்கணக்கான வருஷங்கள் வரை நடராஜப் பெருமானுடைய தாண்டவ தரிசனம் ஹரிஜனங்களுக்குக் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் நந்தி அல்ல; வைதீகர்களின் பிடிவாத மனப்பான்மையே ஆகும். ஹரிஜனங்களுக்குப் பகவானுடைய தரிசனம் கிடைக்காதபடி அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். தமிழ்நாடெங்கும் வீசிய ஆலயப் பிரவேசச் சண்டமாருதம் கூட அவர்களை அசைக்க முடியவில்லை. கடைசியில், சென்னை சர்க்கார் இயற்றிய ஆலயப் பிரவேசச் சட்டம் அவர்களை "சற்றே விலகி" யிருக்கும் படியாகச் செய்துவிட்டு, ஹரிஜனங்களுக்கு நடராஜப் பெருமானுடைய தரிசனத்தை அளித்திருக்கிறது.

நடராஜப் பெருமானுடைய விஷயம் இப்படியிருக்கும்போது, மலையாளத்தில் மற்றொரு புகழ் பெற்ற கோவிலும் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப் பட்டிருக்கிறது. அது குருவாயூர்க் கோவிலாகும். சென்ற வாரம் ஸ்ரீ கேளப்பன் முதலிய அன்பர்கள் மேற்படி ஆலயப் பிரவேச விழாவைச் சிறப்பாக நடத்தி வைத்திருக்கிறார்கள்.

இனி இரண்டே இரண்டு கோவில்கள் பாக்கியிருக்கின்றன.

வடக்கே திருப்பதியும் தெற்கே ராமேசுவரம் கோவிலும் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டால், அப்புறம் தீண்டாமை வழக்கம் தமிழ் நாட்டில் அடியோடு ஒழிந்துவிட்டதென்றும், ஆலயப் பிரவேச இயக்கம் முற்றுப்பெற்றது என்றும் சொல்லலாம். இன்னும் சில நாட்களுக்குள்ளாக அதுவும் நிறைவேறுமென்பது நிச்சயம்.

நல்ல செய்தி

வேலை நிறுத்தம் செய்யப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கும் ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கொஞ்சம் ஆறுதல் அளிக்கத் தக்க ஒரு செய்தி கிடைத்திருக்கிறது.

சர்க்கார் அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலனை செய்த பிறகு, அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதென்று முடிவு செய்திருக்கிறார்களாம். இது நல்ல செய்தி என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் சர்க்கார் ஆரம்ப ஆசிரியர்களுடைய சம்பளத்தை உயர்த்தும் போது, ஒரு விஷயத்தை முக்கியமாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இனிமேல், மீண்டும் புனராலோசனை செய்வதற்கோ சமீப காலத்தில் மறுபடியும் சம்பள விகிதத்தைத் திருத்தியமைப்பதற்கோ இடம் வைத்துக் கொள்

னாமல் இப்போதே எல்லாவற்றையும் நன்றாக யோசனை செய்து, ஆசிரியர்கள் தங்களுடைய வாழ்க்கையைச் சிரமமில்லாதபடி நடத்துவதற் கேற்ற முறையில் சம்பளத்தை உயர்த்துவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

சர்க்கார் ஆரம்ப ஆசிரியர்களுடைய சம்பளத்தை உயர்த்தும்போது, இன்னொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டியது அவசியமாகும். கனம் கல்வி மந்திரி திருவொற்றீசுவரர் இலவச ஹைஸ்கூலைத் திறந்துவைத்துப் பேசும்போது அங்கே ஒரு முக்கியமான விஷயத்தைப் பிரஸ்தாபித்திருக்கிறார். சர்க்கார் நடத்தும் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப்படுகிறதோ, அதே சம்பளத்தைத் தனிப்பட்டவர்கள் நடத்தும் 'எய்டெட்' பள்ளிக்கூடங்களில் உள்ள ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்றும், இது சம்பந்தமாக அவர்கள் மேற்படி பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு யோசனை சொல்லி வருவதாகவும், அந்த யோசனையை அவர்கள் நிறைவேற்று விட்டால், அதை நிறைவேற்றும்படியாக சர்க்கார் கட்டாயப் படுத்தவேண்டிய காலம் வருமென்றும் ஸ்ரீ அவிநாசிலிங்கம் சொல்லியிருக்கிறார். அத்தகைய காலம் வருவதற்கு முன்னாலேயே மேற்படி பள்ளிக்கூட நிர்வாகிகள் தங்கள் போக்கைச் சீர்படுத்திக் கொள்ளுவார்களாக.

மண்டபத்துக்கு அதிர்ஷ்டம்!

சென்னை சர்க்கார் மாளிகையில் உள்ள 'பாங்குவெட்டிங் ஹால்' என்ற விருந்து மண்டபத்துக்கு இப்போது பிரமாதமான அதிர்ஷ்டம் அடிக்கிறது என்று தான் சொல்லவேண்டும். முன்பெல்லாம் சர்க்கார் மாளிகையிலே அந்த மாதிரியாக ஒரு மண்டபம் இருக்கிறது என்பது அங்கேயுள்ள கவர்னருக்கும் அந்த கவர்னருக்குக் கீழே வேலை பார்க்கும் மந்திரி மகானுபாவர்களுக்குந்தான் தெரியுமே யொழியச் சாதாரண மக்களுக்குத் தெரியாது. கொஞ்ச நாளைக்கு முன்பு, அகில இந்தியப் பத்திரிகாசிரியர்கள் அங்கு கூடி மேற்படி மண்டபத்துக்குப் பெருமை அளித்து விட்டுப் போனார்கள். இப்போதோ உலகப் புகழ் பெற்ற மகாநாடு ஒன்று அங்கு நடைபெறப் போகிறது. சர்வதேச மாணவர் சேவா சங்கத்தின் தென் கிழக்கு ஆசிய மகாநாடு இம்மாதம் 10-ம் தேதியிலிருந்து 16-ம் தேதி வரை நடைபெறப் போகிறது.


சிறப்பாக நடக்கட்டும்!

சர்வ தேச மாணவர் சேவா சங்கம் என்ற மேற்படி சங்கத்துக்கு எல்லா நாடுகளிலும் கிளைச் சங்கங்கள் உண்டு. மாணவருக்கு உதவி, சர்வ தேசக் கல்வி, ஆராய்ச்சிகள் — இந்த மூன்றும் தான் இந்தச் சங்கத்தின் பிரதான நோக்கங்கள். யுத்த காலத்தில் படுகாயமுற்ற மாணவர்களுக்கு இந்த ஸ்தாபனம் செய்திருக்கும் தொண்டு அளவிடற்கரியதாகும். காயமுற்ற மாணவர்களுக்குப் புத்தகங்கள், மருந்துகள், உணவுப் பொருள்கள், இலவச சம்பளம் முதலிய உதவிகளையெல்லாம் செய்தது. இந்திய மாணவர்களுக்கு ஹாஸ்டல் வசதி செய்வது, வைத்தியம் கற்றுக் கொடுப்பது, கலவரங்களில் காயமுற்ற மாணவர்களுக்கு ஆஸ்பத்திரி வசதி அளிப்பது—என்பதும் இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் இந்தச் சங்கத்தின் திட்டமாகும். இவ்வளவு அருமையான திட்டத்துடன் தொண்டு செய்ய முன் வந்திருக்கும் இந்தச் சங்கத்தின் மகாநாடு சிறப்பாகவும் வெற்றியுடனும் நடந்தேற வேண்டுமென்று யார்தான் விரும்ப மாட்டார்கள்?


அந்தமான் கைதி


பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார் காலஞ்சென்ற டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் ஞாபகார்த்தமாக ஆண்டுதோறும் தமிழ்ப் பரிசு ஒன்று வழங்கத் தீர்மானித்திருக்கிறார்கள். இந்தப் புனித கைங்கரிய நிதிக்காக 7-6-47 சனிக்கிழமை இரவு 8-30-க்கு மாதுங்கா S. I. E. S. ஹாலில் "அந்தமான் கைதி" என்னும் நாடகம் நடைபெறுகிறது. பம்பாய்த் தமிழர்கள் பரிபூரண ஆதரவு நல்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறோம்.

பொழுது புலர்ந்தது!



நிகழ்ச்சிச் சித்திரம் -சாஸ்திரி





இறுதிப் படலம்

அகஸ்திய முனிவர் சமுத்திரத்தையே ஆசமனீயம் செய்து விட்டாராம்; வாதாபி என்ற அசுரனைக் கபளீகரம் செய்து ஜீரணித்தும் விட்டாராம்.

மந்திரவாதியின் ஒரு சிறு புட்டியில் பிரம்மாண்டமான பூதம் அடங்கிக் கிடந்ததாகக் கதை உண்டு.

இவையெல்லாம் உண்மையாயினும் பொய்யாயினும், இன்றுள்ள தந்திரவாதிகள் மேற்படியார்களைக் காட்டிலும் மகா சூரர்களாகவும் அதிக அகட விகட சாமர்த்தியசாலிகளாகவும் இருப்பதை நேரில் பார்க்கிறோம்.

ஒரு சிறு வெடிகுண்டு சில விநாடி நேரத்துக்குள் லட்சக் கணக்கான மக்களையும் மனைகளையும் மண்ணோடு மண்ணாக்கி விடவில்லையா?

ஆறு கோடி ஜனங்கள் நூறு கோடி ஜனங்களை எத்தனையோ நூற்றாண்டுகளாக அல்லோல கல்லோலப்படுத்திவரவில்லையா?

மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரியது!

சமீபத்தில் ஒரு சிறு கைப் பெட்டி வானத்திலிருந்து கீழே இறங்கியது.

அது ஆறாயிரம் மைல்கள் தூரம் யாத்திரை செய்து வந்ததென்ற இரகசியத்தையும் வாசக நேயர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறோம்.

மந்திரவாதியின் புட்டியிலிருந்த பூதத்தைக் காட்டிலும் பிரம்மாண்டமான வஸ்து, தந்திரவாதி கொண்டு வந்த மேற்படி சிறு கைப்பெட்டியில் இருந்தது.

அதுதான் தலைவிதி! நாற்பது கோடி மக்களின் தலைவிதி!!

* * *

சென்ற திங்கட்கிழமை யன்று ராகு காலம் முடிந்தபின் சிறிதும் தாமதியாமல் வைஸ்ராய் லார்டு மவுண்ட் பாட்டன் மேற்படி தலைவிதியை, அதாவது புதிய இந்திய அரசியல் திட்டத்தைத் தலைவர்களின் முன்னிலையில் எடுத்து வைத்தார்.

அதன்படி, இந்தியாவைப் பிளப்பது என்பது நிச்சயமாகி விட்டது.

ஒரு சமயம் அமெரிக்காவையும் இவ்வாறே பிரிக்க சூழ்ச்சி நடந்தது. ஆனால், அமெரிக்க தேச பக்தர்கள் ஒரே உறுதியுடன் நின்று, அந்த சூழ்ச்சியைத் தகர்த்தெறிந்து விட்டனர்.

ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எவ்வளவு வேற்றுமை இருப்பதாகக் கூறப்படுகிறதோ, அதைக் காட்டிலும் அதிக வேற்றுமையுள்ள சமூகங்கள் ருஷியாவில் இருக்கின்றன. அவ்விதமிருந்தும் ருஷியாவில் பிரிவினை ஏற்பட்டு விடவில்லை.

அப்படியிருக்க, குமரி முதல் ஹிமயம் வரையிலும் ஸிந்து முதல் பிரம்மபுத்ரா வரையிலும் பல பல நூற்றாண்டுகளாய் ஒரே தேசமாக இருந்து வந்த இந்தியா பிரிக்கப்படப் போகின்றது.

* * *

பிரிட்டிஷ் மந்திரிகள் இந்தியாவுக்கு வந்து பல வாரங்கள் வரை நிலைமையை நன்கு ஆராய்ந்து, பல தலைவர்களுடனும் கலந்து ஆலோசித்து, இந்தியா ஐக்கிய இந்தியாவாகவே இருக்க வேண்டும் என்று கூறிய பிரசித்தி பெற்ற 1946 மே 16உ திட்டம் புதையுண்டு விட்டது.

எனவே, ஒரே நாட்டில் ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாத இரண்டு சர்க்கார்கள் சிருஷ்டியாகும் விசித்திரத்தைக் கூடிய சீக்கிரம் காணலாம்.

புதிய திட்டத்தை யொட்டி வைஸ்ராய் மவுண்ட் பாட்டன், பண்டித ஜவாஹர்லால் நேரு, ஜனாப் ஜின்னா, சர்தார் பலதேவ சிங் முதலியோர் வானொலி மூலம் பேசியிருக்கிறார்கள்.

"இந்தியாவைப் பிரிக்க வேண்டும் என்று முஸ்லிம் லீக் கூறுவதை ஒப்புக்கொள்ளுவதாயின், சில மாகாணங்களின் பிரிவினையையும் ஒப்புக்கொண்டுதான் தீர வேண்டும். எனவே, இன்னும் சில மாதங்களுக்குள் இந்தியாவில் ஏற்படப் போகும் ஒன்று அல்லது இரண்டு டொமினியன் சர்க்கார்களிடம் அதிகாரத்தை மாற்றுவதென பிரிட்டிஷ் சர்க்கார்

முடிவு செய்திருக்கிறார்கள்'' என்று வைஸ்ராய் அறிவித்திருக்கிறார்.

பண்டித ஜவாஹர்லால் நேரு சொல்லுகிறார்:

''இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று ஜனங்களைக் கேட்டுக் கொள்ளுவதில் எனக்குச் சந்தோஷம் எதுவுமில்லை. எனினும் இதை ஏற்றுக் கொள்ளுவதுதான் சரியான வழி.

''சுதந்திர ஐக்கிய இந்தியாவுக்காகவே நாம் பல தலைமுறைகளாகப் போராடினோம். அப்படியிருக்க, இந்தியாவின் சில பாகங்கள் நம்மை விட்டுப் பிரிந்து செல்லுவது நமக்கு வேதனையையே கொடுக்கிறது.

''எனினும், ஐக்கிய இந்தியாவுடன் சேர்ந்திருக்கும்படி யாரையும் வற்புறுத்துவது நமது நோக்கமல்ல. அவ்வாறு வற்புறுத்தாமல் இருப்பதன் மூலம் ஒரு வேளை எதிர்காலத்தில் நமது இலட்சியமான, அதிக உறுதி கொண்ட அஸ்திவாரத்துடன் கூடிய ஐக்கிய இந்தியாவைச் சீக்கிரம் அடைந்தாலும் அடையலாம்.''

மேற்கூறிய விதம் ஜவாஹர்லால்ஜி குறிப்பிட்டிருக்கிறார்.

* * *

ஆனால் ஜனாப் ஜின்னாவோ வென்றால், மேற்படி திட்டத்தைத் துருவி ஆராய்ச்சி செய்யப் போகிறாராம். அத்திட்டம் அவ்வளவு திருப்திகரமாக இல்லையாம். அவ்விஷயமாக அடுத்த வாரம் முஸ்லிம் லீக் ஒரு முடிவுக்கு வரும் என்று அவர் கூறியிருக்கிறார்.

மற்றும் ஜனாப் ஜின்னா தமது பிரசங்கத்தில், எல்லைப்புற மாகாணத்தில் நடந்து வரும் அமைதியான சட்ட மறுப்பு இயக்கத்தை வாபஸ் செய்து கொள்ளும்படியும் தமது சீடர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

அமைதியான சட்டமறுப்பு இயக்கமாம்!

அதோ கூரை மீதேறிக் கொள்ளிக் கட்டையைச் சுழற்றுகின்றானே, அவன்தான் நமது பையன்களுள் மிகவும் சாதுவானவன் என்றாராம் ஒரு தகப்பனார்!

ஜெயிலைக் கொளுத்துவதும், நிராபராதிகளான பெண்களையும் சிசுக்களையும்கூடப் படுகொலை செய்வதும், ஏழை ஜனங்களின் வீடு வாசல்களைத் துவம்சம் செய்வதும், பிரயாணிகள் செல்லும் ரயில் வண்டிகளைக் கவிழ்ப்பதும் அமைதியான சட்டமறுப்பு இயக்கமாயின், பலாத்கார சட்ட மறுப்பு இயக்கம் என்பது எப்படியிருக்குமோ?

ஆனால், இனி பலாத்கார நடவடிக்கைகளைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது என்று வைஸ்ராயும், ஜவாஹர்லால்ஜியும், இராணுவ மந்திரியான சர்தார் பலதேவ சிங்கும் ஏகோபித்து கண்டிப்பாகக் கூறியிருக்கின்றனர்.

''நம் தேசத்தின் பல பாகங்களிலும் வெட்கக் கேடான, மிருகத்தனமான, வெறுக்கத்தக்க பலாத்காரச் செயல்கள் நடைபெற்று வருகின்றன. அவை நின்று தீரவேண்டும். அவற்றிற்கு முற்றுப் புள்ளி வைக்க நாங்கள் உறுதி கொண்டுள்ளோம். இன்றோ அல்லது எதிர்காலத்திலோ, பலாத்கார முறைகளால் அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டுவிட முடியாது என்பதை நாம் தெளிவாக்கிவிட வேண்டும்'' என்று ஜவாஹர்லால்ஜி முழக்கம் செய்திருக்கிறார்.

எனவே, நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இன்னும் கூட நிகழ்ந்து வரும் படுகொலைகளும் பாதகச் செயல்களும் இனியாவது தொடர்ந்து நடைபெற வழி இராமற் போகும் என்று நம்புகிறோம்.

பாஞ்சாலத்தில் லீக்கர்கள் பலாத்காரத்தில் இறங்கியதால்தான் பாஞ்சாலப் பிரிவினைப் பிரச்னை விசுவரூபம் எடுத்தது.

பின்னர் வங்காளப் பிரிவினையையும் லீக்கர்களால் தடுக்க முடியவில்லை.

இறுதியாக வடமேற்கு எல்லைப்புற மாகாணம் பாக்கிஸ்தானத்திலோ அல்லது ஹிந்துஸ்தானத்திலோ சேராமல் தனியரசாகத் திகழ முயற்சிக்கும் என்ற நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது.

எனவே, லீக்கர்கள் தங்களுடைய பலாத்காரம் காரணமாகப் பிரமாத லாபம் எதுவும் அடைந்ததாகத் தெரியவில்லை.

இனியாவது அவர்கள் பலாத்கார முறைகளை விட்டொழித்து, ஹிந்து முஸ்லிம்களின் க்ஷேமத்துக்காக நாட்டில் அமைதியை நிலைநாட்ட முற்படுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

* * *

தூரத்துப் பச்சை கண்களுக்குக் குளிர்ச்சி என்று சொல்லுவது உண்டு.

அதுபோலவே, பாக்கிஸ்தான் வெகு தூரத்தில் இருந்தபோது அது கண்களுக்குக் குளிர்ச்சியாக இருந்தது. ஆனால் அது சமீபத்தில் வந்ததும் அதன் கோர ரூபம் சகிக்க முடியவில்லையாம்.

ஒரு சுந்தரமான புருஷனுக்கும் ஓர் எலும்புக் கூடுக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கும்?

தாங்கள் கற்பனை செய்து வந்த பாக்கிஸ்தானத்துக்கும், பிரிட்டிஷ் திட்டத்தில் விவரித்துள்ள பாக்கிஸ்தானத்துக்கும் அவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்று பிரபல முஸ்லிம் லீக்கர்கள் கருதுகிறார்களாம்.

"இன்னும்கூடக் காரியம் மிஞ்சிவிடவில்லை. காங்கிரஸ் எங்களுடைய நல்லெண்ணத்தைப் பெறவேண்டும். பிரிட்டிஷ் மந்திரிகளின் மே 16உ திட்டத்தைக் காங்கிரஸ் அந்தரங்க சுத்தியுடன் நிறைவேற்றும் என்ற நம்பிக்கை எங்களுக்கு ஏற்படும்படி செய்ய வேண்டும். எங்கள் விஷயத்தில் காங்கிரஸ் பத்து வருஷ காலம் வரையில் மிகவும் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டுமாயின், நாங்கள் பாக்கிஸ்தான் என்ற பேச்சையே மறந்து விடுவோம்" என்று ஒரு பிரபல முஸ்லிம் லீக்கர் கூறியதாக டில்லிச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

* * *

மூன்றுவது பேர்வழிகளின் உதவியை நாடாமல் சமரசமாகப் போனால், ஜனாப் ஜின்னாவுக்கு பாக்கிஸ்தானைக் காட்டிலும் அதிக பலன் கிடைக்கும் என்று மகாத்மா காந்தி சமீபத்தில் உறுதி கூறினார்.

இன்று காங்கிரஸ் மந்திரி சபைகள் இருக்கும் சகல மாகாணங்களிலும் முஸ்லிம்களுக்கு, அவர்களுடைய ஜனத்தொகை விகிதாசாரத்தை விட மிகவும் அதிகமாக சர்க்கார் உத்தியோகங்களும் இதர சலுகைகளும் கிடைத்து வருவதைப் பிரபல லீக்கர் கூட சமீபத்தில் ஒப்புக் கொண்டார்.

முஸ்லிம்கள் மெஜாரிட்டியாக உள்ள மாகாணங்களில் எத்தனையோ கொடுமைகளும் கொலைப் பாதகங்களும் நடந்து வருகின்றன. அப்படியிருந்தும், மற்ற பல மாகாணங்களிலும் ஹிந்து — முஸ்லிம் தகராறுக்கு இடமின்றிக் காங்கிரஸ் சர்க்கார்களின் நிர்வாகம் நடந்து வருவது கண்கூடாகக் காணும் விஷயமாகும்.

சென்ற இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகக் கொடுங்கோல் புரிந்து வந்த பிரிட்டிஷார் விஷயத்தில்கூட மிகவும் பெருந்தன்மையுடனும் சிநேக பாவத்துடனும் நடந்துகொண்டு வரும் காங்கிரஸ் தலைவர்கள், ஐக்கிய இந்தியாவில் முஸ்லிம்களிடம் அதிக அன்பும் ஆதரவும் காட்டுவார்கள் என்பதில் சந்தேகம் எழவே இடமில்லை.

பிரிவினை இன்றியே, முஸ்லிம்கள் ஐக்கிய இந்தியாவில் சகல நியாயமான உரிமைகளையும் நிச்சயமாகப் பெற முடியும் என்பதையே மேற்படி சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

எனவே, மகாத்மா காந்தி கூறுவது போல், பிரிக்கப்படப் போகும் இரு பிரதேசங்களும் மீண்டும் ஒன்று பட்டு ஐக்கிய இந்தியாவாகத் திகழும் காலம் வரலாம் என்று நம்புவோமாக!

* * *

இந்தியா சம்பந்தமான ஓர் அரசியல் திட்டத்தை மகாத்மா காந்தி முதல் வின்ஸ்டன் சர்ச்சில் வரையிலும் சகலரும் ஒருவிதமாக ஒப்புக்கொண்டிருப்பது இதுதான் முதல் தடவையாகும்.

எனவே, அத்தகைய ஒரு புதுமைக்குக் காரணபூதரான வைஸ்ராய் லார்டு மவுண்ட்பாட்டனின் பெரு முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது தான்.

இருந்தாலும் மேற்படி திட்டத்திலும் பல விபரீதமான அம்சங்கள் அடங்கியிருக்கின்றன.

அந்தப் பிரிவினைத் திட்டத்தின் மூலம் சிறுபான்மையோர் பிரச்னை அடியோடு தீர்ந்துவிடப் போவதில்லை. முஸ்லிம்கள் பெரும்பான்மையோராக உள்ள பிரதேசங்களில் கோடிக் கணக்கான ஹிந்துக்களும் இதரர்களும் இருக்கிறார்கள். ஹிந்துக்கள் பெரும்பான்மையோராக உள்ள பிரதேசங்களில் கோடிக் கணக்கான முஸ்லிம்களும் இருக்கிறார்கள்.

எனவே, எதிர்காலத்தில் குட்டி நவகாளி சம்பவங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது தலைவர்களின் கடமையாகும்.

வடமேற்கு எல்லைப்புற மாகாண விஷயமும் தெளிவாக இல்லை.

அம் மாகாணத்தின் இணையற்ற தலைவர்களான பிரதம மந்திரி கான் சாகிபும் கான் அப்துல் கபார்கானும்,

மேற்படி மாகாண ஜனங்கள் இஷ்டப்பட்டால், அது சுதந்திர பட்டாணிய அரசாக விளங்க உரிமை வேண்டும் என்று சந்தேகத்துக்கு இடமிராமல் கூறியிருக்கிறார்கள்.

ஆனால், புதிய திட்டத்தில் அதைப் பற்றிய பிரஸ்தாபமே இல்லை.

அம் மாகாணம், இரண்டு அரசியல் நிர்ணய சபைகளில் ஏதாவது ஒன்றில் கலந்துகொண்டுதான் தீர வேண்டும்.

மற்றும் எந்த அரசியல் நிர்ணய சபையில் சேருவது என்பதை, மற்ற மாகாணங்கள் சம்பந்தப்பட்ட வரையில் மாகாண சட்டசபைகள் முடிவு செய்ய வேண்டும் என்பது திட்டத்தின் ஷரத்தாகும். ஆனால், வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் மாத்திரம் அவ்விஷயமாகப் பொது ஜன வோட் எடுக்க வேண்டுமாம்.

அதாவது. மேற்படி மாகாணத்தின் உயர்தர தலைவர்களின் கோரிக்கையையும், சட்ட சபையையும் புறக்கணித்துவிட்டு, அங்கு கலகத்தைத் தூண்டிவிட்டுச் சூழ்ச்சி செய்த கவர்னர் காரோவுக்கு வெற்றியைக் கொடுத்திருக்கிறது புதிய திட்டம்!

அதே சமயம், சமஸ்தானங்கள் விஷயமாக முற்றிலும் வேறான முறை கையாளப்பட்டிருக்கிறது.

அதாவது, சமஸ்தானங்கள் தற்போதைய அரசியல் நிர்ணய சபையில் சேரலாம்; அல்லது புதிதாக ஜனனமாகப் போகும் சபையிலும் சேரலாம், இரண்டுமின்றி வேறு விதமாகவும் செய்யலாம் என்ற தோரணையில் புதிய திட்டம் வைஸ்ராயால் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது!

* * *

முஸ்லிம்லீக் சம்பந்தப்பட்ட வரையில் புதிய திட்டத்தின் மூலம் பூரண பாக்கிஸ்தான் கிடைத்து விடவில்லை.

காங்கிரஸ் சம்பந்தப்பட்ட வரையில், அந்தத் திட்டத்தினால் இந்தியாவின் ஐக்கியத் தன்மைக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இருந்தாலும் நாட்டில் நடந்துவரும் நாசகரமான கலவரங்கள் தீர்ந்து அமைதி ஏற்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன்தான், இயற்கைக்கு முரணான பிரிவினைத் திட்டத்தையும் காங்கிரஸ் தலைவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இந்தத் திட்டத்தையும் அமுலுக்குக் கொண்டு வருமுன் எத்தனையோ சிக்கல்களைச் சமாளித்தாக வேண்டும்.

உதாரணமாக, பஞ்சாப், வங்காளப் பிரிவினை எல்லைகளை நிர்ணயிக்கும் கமிஷனின் அலுவல்கள் மகத்தானவை.

தற்போதுள்ள அரசியல் நிர்ணய மகாசபையில் சேருவதா, அல்லது முஸ்லிம் அரசியல் நிர்ணய சபையில் சேருவதா என்பதை முடிவு செய்வதற்காக வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் பொதுஜன வோட் எடுப்பதென்பதும் சுலபமான விஷயமல்ல.

* * *

பிரிட்டிஷார் பிரித்தாளும் தந்திரத்தையே தங்களுடைய முக்கிய ஆயுதமாகக் கொண்டு இந்தியாவுக்குள் பிரவேசித்தார்கள்.

அதே ஆயுதத்தாலேதான் இந்தியாவை ஜயித்தார்கள்.

எனவே, அவர்கள் இந்தியாவை விட்டுச் செல்லும்போதும் இந்தியாவை நிரந்தரமாகப் பிரித்துவிட்டுச் செல்லுவது முற்றிலும் பொருத்தமேயாகும்!

பிரிட்டிஷார் காலடி வைத்த அயர்லாந்து, எகிப்து, பாலஸ்தீனம் முதலிய நாடுகளின் கதியைக் கவனிக்கும்போது. இந்தியாவும் அதே கதிக்கு ஆளாவதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தியாவை ஐக்கிய இந்தியாவாக விட்டுவிட்டு அவர்கள் சென்றால்தான் அது மகத்தான ஆச்சரியமாகும்.

ஐக்கிய இந்தியாதான் சிறந்தது என்று இன்னும்கூட பிரிட்டிஷார் சொல்லிக் கொண்டுதான் வருகிறார்கள்.

ஆனால், இந்தியர்கள் அதை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லையென்று கூறி இந்தியர்கள் தலையில் பாரத்தைப் போட்டு விட்டு, பிரிவினையை அமுலுக்குக் கொண்டு வரும் விஷயத்தில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

மற்றும் இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி இருந்த தென்பதற்குப் பிரிவினையைக் காட்டிலும் தகுதியான ஞாபகச் சின்னம் வேறொதுவும் இருக்க முடியாது!

எது எப்படியாயினும், இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இறுதிப் படலம் சில மாதங்களில் முடியப் போவது மாத்திரம் நிச்சயம்.

கம்பர் தரும் காட்சி

179. தம்பியைப் பார்த்து விட்டான்!

டி. கே. சி

ஜடாயு ராவணனோடு போர் புரிந்ததன் காரணமாக இறக்கை அறுபட்டுப் பூமியில் விழுந்தான். இரத்தம் அதிகமாகச் சிந்தி பல ஹீனம் உண்டாய்விட்டது. இதோடு, "அடடா, சீதையை மீட்க முடியாமல் போய்விட்டதே! ராம லக்ஷ்மணர்கள் என்ன பாடு படுவார்கள்!" என்ற இரக்கம் வந்து மனசைத் தாக்கவும் அறிவிழந்து மூர்ச்சையடைந்து விட்டான் என்பதைப் பார்த்தோம்.

ஜடாயுவின் நிலைமை இப்படி ஆக, ராவணன் யாதொரு தடையுமின்றிச் சீதையைத் தூக்கிக் கொண்டு வேகமாய்ப் போகிறான்.

வஞ்சியை அரக்கனும்
வல்லை கொண்டுபோய்ச்,

செஞ்சவே திருவுருத்
தீண்ட அஞ்சுவான்,

நஞ்சியல் அரக்கியர்
நடுவண் ஆயிடைச்,

சிஞ்சுப வனத்திடைச்
சிறைவைத் தான்அரோ!

[வஞ்சியை அரக்கனும் வல்லை கொண்டு போய்: சீதையை அரக்கன் வேகமாகக் கொண்டு போய்; செஞ்செவே திருவுருத் தீண்ட அஞ்சுவான்: தூய்மையான சீதையின் மேனியைத் தீண்ட அஞ்சினவனாய்; நஞ்சியல் அரக்கியர் நடுவண்: நஞ்சைப் போன்ற கொடிய அரக்கியர் மத்தியில்; ஆயிடை: வாய்ப்பான இடத்தில்; சிஞ்சுப வனத்திடை: மரங்கள் அடர்ந்த அசோக வனத்தின் ஒரு பக்கத்தில்; சிறை வைத்தான் அரோ: சிறை வைத்து விட்டான்!]

• • •

ராவணன் செயலைச் சொல்லி முடித்தோம். இனி, ராமனைத் தேடிப் போன லக்ஷ்மணனது நிலை எப்படியிருக்கிறது, பார்ப்போம்.

இந்நிலை இனையவன்
செயல்இ யம்பினும்;

'பொன்னியல் மானின்பின்
தொடர்ந்து போகிய

மன்நிலை அறி'கென
மங்கை ஏவிய

பின்னவன் தன்நிலை
பேசு வாம்அரோ.

[இந்நிலை இனையவன் செயல் இயம்பினும்: இந்த விதமாக ராவணன் செயலைச் சொன்னோம்; பொன் இயல் மானின் பின் தொடர்ந்து போகிய: பொன் மயமான மானின் பின் தொடர்ந்து போன; மன் நிலை அறிக என: ராமனது நிலையை அறிவாயாக என்று; மங்கை ஏவிய: சீதை ஏவிய; பின்னவன் தன் நிலை பேசுவாம் அரோ: லக்ஷ்மணனது நிலையைப் பற்றி இனிமேல் சொல்லுவோம்.]

கடலில் பாய் கட்டிய மரக்கலம் போவது போல, லக்ஷ்மணன் விரைவாகப் போகிறான். ராமனுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்திருக்குமோ என்ற சந்தேகம் அவன் உள்ளத்தில் இல்லாமலில்லை. இந்த நிலையில், எதிரே ராமன் வருவதைக் கண்டு கொண்டான்.

தென்திரைக் கலம்என
விரைவில்ச் செல்கின்றான்,

புண்டரீ கத்தடங்
காடு பூத்தொரு

கொண்டல்வந்(து) இழிந்தன்ன
கோலத் தான்தனைக்

கண்டனன், மனம்எனக்
களிக்கும் கண்ணினான்.

[தென் திரைக் கலம் என: அலைகளோடு கூடிய கடலில் பாயும் மரக்கலம் என; புண்டரீகத் தடங் காடு பூத்து: செந்தாமரை மலர்கள் நிறையப் பூத்த; ஒரு கொண்டல்: ஒரு நீல மேகம்; வந்து இழிந்தன்ன: குன்றிலிருந்து கீழ இறங்கியது போலும்; கோலத்தான் தனைக் கண்டனன்: அழகு மயமான ராமனைக் கண்டு கொண்டான்; மனம் எனக் களிக்கும் கண்ணினான்: லக்ஷ்மணனுக்கு உள்ளத்தில் ஆனந்த வெறி உண்டாயிற்று; இந்த ஆனந்த வெறி இரண்டு கண்ணுக்குள்ளும் போய் இன்பத்தை ஊட்டியது.]

• • •

ராமனுக்கோ, மனசு ஒரு நிலையில் நில்லாமல் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. "மாரீசன் கூக்குரலைக் கேட்டு




விஷயம் தெரியாமல் வேண்டாத மயக்கத்துக் கெல்லாம் உள்ளாகிச் சோர்ந்து கிடப்பாளே, சீதை!" என்றெல்லாம் எண்ணிக் கொண்டே வருகிறான்.

'துன் எனும் அவ்வுரை
தொடரத் தோகையும்
பெண் எனும் பேதைமை
மயக்கப் பெற்றியாள்
உள் நிறை சோரும்' என்(று)
ஊசல் ஆடும் அக்
கண்ணனும் இளவலைக்
கண்ணுற்றான் அரோ.

[துன் எனும் அவ்வுரை தொடர: அச்சத்தை விளைவிக்கத் தக்க மாரீசனது கூக்குரல் எட்டவும்; தோகையும்: சீதையும்; பெண் எனும் பேதைமை மயக்கப் பெற்றியாள்: பெண்ணாய் இருப்பதால் ஒன்றும் தெரியாமல் மயக்கத்துக்கு உள்ளானவளாய்; உள் நிறை சோரும் என்று: அவளுக்கு இயல்பாய் உள்ள மனோதிடம் போய் விடத்தானே செய்யும் என்று; ஊசலாடும் அக்கண்ணனும்: மனசு உலைந்துள்ள ராமனும்; இளவலைக் கண்ணுற்றான்: தம்பியைக் கண்டு விட்டான்.]

லக்ஷ்மணன் ராமனைக் கண்டு சந்தோஷப்பட்டான்; ஆனால் லக்ஷ்மணனைப் பார்த்து ராமன் சந்தோஷப்படவில்லை. எத்தனையோ கவலைக்கிடமான எண்ணங்கள் அவனது உள்ளத்தைத் தாக்குகின்றன.

இப்படி இரண்டு பாத்திரங்களையும் முரணான நிலையில் வைப்பதில் அருமையான நாடக ரஸம் உண்டாகிறது. இதிகாசத்தின் வேகம் அதிகரிக்கிறது.








MENTMORE
OSMI
IRIDIUM
4ct
GOLD
விலை
ரூ. 15/-



கண்டறியாதன கண்டேன்!

சின்ன அண்ணாமலை

திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்தில் ஒரு பெரிய மகாநாட்டைப் போல நடந்த மாபெருங் கூட்டத்தில் சபா நாயகரும், 'கல்கி' ஆசிரியரும் ரொம்பவும் திணறித் திண்டாடிப் போனார்கள். ஒரு சமயம் அவர்கள் இருந்த இடமே தெரியாமல் போய்விட்டது! பற்பல ஸ்தாபனங்களின் சார்பாகப் போடப்பட்ட ரோஜாப்பூ மாலைகள் அவ்வாறு மேடையில் குவிந்து அவர்களை மறைத்து விட்டன.

"வைதிக ஹரிஜன ஆஸ்திக சங்கத்தின் சார்பாக இந்த மாலையைப் போடுகிறேன்!" என்று சொல்லிவிட்டு ஒரு பெரியவர் — விபூதி முதலிய சைவ சின்னங்கள் அணிந்த ஹரிஜனப் பிரமுகர் — மாலை போட்ட போது கூட்டத்தில் ஒரே கரகோஷம். இந்த ஹரிஜனங்கள் இவ்வளவு சமூகக் கொடுமைகளுக்கு ஆளான பிறகும் இவர்களில் வைதிகர்களும் ஆஸ்திகர்களும் இருக்கிறார்களே என்று நினைத்து எல்லோரும் ஆச்சரியப்பட்டோம். புஷ்பக் கடைக்காரர்களின் சார்பாக வந்த மாலை, அழகிலும் உருவத்திலும் மற்ற மாலைகளை யெல்லாம் தோற்கடித்து, திருநெல்வேலி பூக்கடை வியாபாரிகளின் ரஸிகத் தன்மைக்குச் சிறந்த விளம்பரமாக மேடையில் காட்சி அளித்தது.

உபசாரப் பத்திரங்களைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. ஓர் உபசாரப் பத்திரத்தில் கல்கி ஆசிரியரைப் பற்றிப் பல விஷயங்கள் கூறிய பிறகு, "ஐயா! கல்கியே! ஒன்று மட்டும் நாங்கள் சொல்ல வேண்டும்..." என்று படிப்பவர் நிறுத்தியதும், என்ன வரப் போகிறதோ என்னமோ என்று நான் பயந்து போனேன்.

"ஐயா, கல்கியே! ஒன்று மட்டும் நாங்கள் சொல்லவேண்டும். தாங்கள் எழுதும் தமிழ் எங்களுக்கு விளங்குகிறது!" என்று படித்து முடித்ததும், அந்தப் புராதனமான நெல்லையப்பர் கோவிலின் கல் தூண்கள்கூட அசைந்து ஆட்டம் கொடுக்கும்படியான கரகோஷம் எழுந்தது. "அடே அப்பா! இந்தத் திருநெல்வேலிக்காரர்கள் வெகு பொல்லாதவர்கள!" என்று முடிவு செய்தேன்.

ஆலயம் அதிர்ந்தது!

மகாநாட்டுக்கு வந்திருந்தவர்களை வரவேற்க எழுந்த ஸ்ரீ மேகநாதன் எப்படி வரவேற்றார், தெரியுமா? சபையோர்களைப் பார்த்துப் பிரசங்கிகள், "கனவான்களே! சீமான்களே! சகோதரர்களே!" என்றெல்லாம் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஸ்ரீ மேகநாதன் தம்முடைய பேச்சின் போது, கூட்டத்திலிருந்த சாதி இந்துக்களைப் பார்த்து, "திருடர்களே! திருடர்களே!" என்று அழைத்து மானத்தை வாங்கி விட்டார்! ராஜாஜி ஒரு சமயம், "ஹரிஜனங்களுக்கு நாம் கோவில்களைத் திறந்து விடுவது ஏதோ தர்மத்துக்காகச் செய்கிற காரியம் என்று நினைக்க வேண்டாம். ஹரிஜனங்களுக்குச் சொந்தமானதை இத்தனை நாளாக அவர்களிடம் கொடாமல் வைத்திருந்தோம். இப்போது திருப்பிக் கொடுக்கிறோம். இது திருட்டுச் சொத்தைத் திருப்பிக் கொடுப்பதுபோலத்தான்!" என்றாராம். இதைக் குறிப்பிட்டு ஸ்ரீ மேகநாதன, "...ஆகையால் திருடர்களே! ஓ, திருடர்களே! ஏ, திருடர்களே! ஹரிஜனங்களுடைய சொத்தை அவர்களிடம் மரியாதையாகத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்!" என்று சாட்டை வாங்கினார்.

மகாநாட்டை ஆரம்பித்து வைத்த சபா நாயகர் ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை அவர்கள் அன்று ஓர் அருமையான பிரசங்கம் செய்தார். ஹரிஜனங்களைச் சமத்துவமாக நடத்தவேண்டிய அவசியத்தைச் சாதி இந்துக்களுக்கு எடுத்துச் சொன்னார். காந்தி மகாத்மாவினாலும் காங்கிரஸினாலும் ஹரிஜனங்கள் அடைந்திருக்கும் நன்மை



திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் பிராகாரத்தில் கூடியிருந்த மாபெரும் கூட்டத்தின் ஒரு பகுதி.

களை அவர்களுக்கு ஞாபகப்படுத்தினர். "இங்கிலீஷ்காரன் மனது வைத்திருந்தால் ஒரே நாளில் தீண்டாமையைப் போக்கியிருக்கலாம். இங்கிலீஷ்காரன் அவ்விதம் செய்யவில்லை. மகாத்மாவினால்தான் தீண்டாமை போயிற்று. இதை நாம் ஒரு நாளும் மறக்கக் கூடாது!" என்று வற்புறுத்திக் கூறியதைச் சபையோர் ஏகமனதாக ஆமோதித்துக் கரகோஷம் செய்தார்கள். ஸ்ரீ சோமயாஜுலு மகாநாட்டுத் தலைவரைப் பிரேரணை செய்து பேசினர். மகாநாட்டுக்குத் தலைமை வகித்த கல்கி ஆசிரியர் ஆரம்பத்திலும் முடிவிலும் இரண்டு தடவை பேசினர். என்னுடைய தொண்டை பாறையாகக் கட்டிப் போயிருந்தது. ஹரிஜன சமூகத்தின் நன்மைக்காக அந்த மாபெருங் கூட்டத்தில் நானும் பேசினேன். (அடிக்கடி தினப் பத்திரிகைகளில், "சின்ன அண்ணாமலையும் பேசினர். பிறகு கூட்டம் கலைந்தது!" என்னும் செய்தி வெளிவருவதை வாசகர்கள் படித்திருக்கக் கூடும். என்னுடைய ஜாதக விசேஷத்தைப் பாருங்கள், நான் எழுதுகிற 'ரிபோர்ட்'டிலும் அந்தச் சம்பிரதாயத்தைக் கடைப்பிடித்து, "நானும் பேசினேன்!" என்று எழுத வேண்டியிருக்கிறது. ஆனால் சுற்றுப்பிரயாணத்தில் எந்த இடத்திலும் நான் பேசியதும் கூட்டம் கலையவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு இடமில்லாமல் என்னை ஒவ்வொரு கூட்டத்திலும் முன்னாடியே பேச விட்டு விட்டார்கள்! நானும் சக்கைப் போடு போட்டுச் சபையோரைக் கலைய விடாமல் குதூகலத்தில் ஆழ்த்தினேன்.)

ஆனால் அன்றையப் பேச்சுகளில் எல்லாம் என் மனதில் நன்றாகப் பதிந்திருப்பது, ஹரிஜனத் தொண்டர் ஸ்ரீ எஸ். ஆறுமுகம் என்பவருடைய பேச்சுதான்.


"பெரியோர்களே! இந்தக் கூட்டத்தில் என்னையெல்லாமா பேசவேண்டுமென்று நினைத்திருக்கிறேன். என் சமூகத்தாரின் குறைகளை எடுத்துச் சொல்லவேண்டும் என்று யோசித்துக் கொண்டு வந்தேன். ஆனால் என் வாழ்நாளில் முதல் முதலாக இந்த ஆலயத்துக்குள்ளே பிரவேசித்து, இந்த அற்புதமான சிற்பங்களையெல்லாம் பார்த்ததும் எனக்கு ஏற்பட்ட வியப்பினால், நான் யோசித்துக் கொண்டு வந்ததெல்லாம் மறந்து போய்விட்டது!" என்று ஸ்ரீ எஸ். ஆறுமுகம் மனமுருகிப் பேசியதைக் கேட்டு, அந்தக் கூட்டத்தில் உருகாதவர்கள் இல்லை.

ஸ்ரீ என். ஆறுமுகம் மறந்து போயிருந்த விஷயங்களையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக ஞாபகப்படுத்திக் கொண்டு சொல்லித் தீர்த்து விட்டார். முக்கியமாகத் திருநெல்வேலிப் பக்கத்தில் மிலச்சவான்தார்களுக்கும் பயிர்த் தொழில் செய்யும் ஹரிஜனங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் தகராறைப் பற்றிச் சொல்லி, அதை நல்லபடியாகத் தீர்த்து வைக்கவேண்டும் என்று வற்புறுத்தினார். ஸ்ரீ என். ஆறுமுகம் போன்ற அறிவாளிகளும் பிரசங்கிகளும் ஹரிஜன சமூகத்தில் தோன்றியிருப்பதைக் குறித்துக் கல்கி ஆசிரியர் தமது முடிவுரையில் பாராட்டி விட்டு, அத்தகைய சமூகத்தை ஆலயத்துக்குள் வரக் கூடாதென்று வைத்திருந்த மூடத்தனத்தைப் பலமாகக் கண்டித்தார். "ஸ்ரீ ஆறுமுகம் எடுத்துக் கூறிய விவசாயத் தொழிலாளிகளின் குறைகளை மிலச்சவான்தார்கள் அனுதாபத்துடன் கவனித்துத் தீர்த்து வைக்கவேண்டும். கால நிலைமையை எண்ணிப் பார்த்து முன் யோசனையுடன் நடந்துகொள்ள வேண்டும். நம் நாட்டிலுள்ள 40 கோடி மக்களில் 30 கோடி ஜனங்களுக்குத்தான் இப்போது உணவு உற்பத்தியாகிறது. ஆகையால் உணவு உற்பத்தி எந்தவிதத்திலும் தடைப்படக் கூடாது. ஜவாஹர்லால்ஜி முதலிய நமது மாபெருந் தலைவர்கள் இப்போது பாகிஸ்தான் பிரச்னையைத் தீர்ப்பதிலும், இங்கிலீஷ்காரனை மூட்டை கட்டி அனுப்புவதிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். 1948 ஜூன் மாதத்திற்குப் பிறகு அவர்கள் இந்நாட்டு உழைத் தொழிலாளிகளின் நன்மையில் பூரண கவனம் செலுத்துவார்கள். ஆகையால் இன்னும் ஒரு வருஷம் எல்லாரும் பொறுமையுடன் இருக்கவேண்டும்" என்று கூறி, கல்கி முடித்தவுடனே, ஸ்ரீ மேகநாதன் எழுந்து நின்று ஒரு மகத்தான புதிய கோஷத்தைக் கிளப்பினார். "ஹிந்து மதம் எங்கள் சொந்த மதம்!" என்பதுதான் மேற்படி கோஷம். அங்கே கூடியிருந்த அவ்வளவு ஆயிரம் ஜனங்களும் ஏககாலத்தில் அந்தக் கோஷத்தைச் செய்யும் வரையில் ஸ்ரீ மேகநாதன் விடவில்லை. கடைசியாக, அவருடைய முயற்சி வெற்றி பெற்றது. அவ்வளவு குரல்களும் சேர்ந்து எழுப்பிய மேற்படி கோஷத்தினால் அந்த ஆலயமே அதிர்ந்தது. என் உடம்பு புல்லரித்தது.

குற்றால யாத்திரை

மத்தியானம் பாளையங்கோட்டை சௌராஷ்டிர சங்கத் தலைவர் வீட்டில் விருந்தும், பிற்பகலில் ஜனாப் வி. எஸ். டி. முகம்மது இப்ராஹிம் அவர்கள் வீட்டில் சிற்றுண்டி விருந்தும் நடந்தன. மூவர்ண தேசியக் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டு விளங்கிய ஜனாப் முகம்மது இப்ராஹிம் அவர்களின் வீட்டில் பல தேசிய முஸ்லிம்கள் கூடியிருந்து, சபாநாயகரையும் கல்கி ஆசிரியரையும் வரவேற்று உபசாரப் பத்திரம் வழங்கினார்கள். "வெப்பம் மிகுந்த பாலைவனத்தின் நடுவில் குளிர்ந்த பசுமரங்கள் அடர்ந்த ஜீவபூமியைப்போல் இந்தத் தேசிய முஸ்லிம் நண்பரின் வீடு விளங்குகிறது" என்றார் கல்கி ஆசிரியர். சபாநாயகர், "தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் ஹிந்துக்கள் முஸ்லிம்கள் எல்லாரும் ஒரே இனத்தவர்தான்" என்று கூறி, அதற்கு உதாரணமாக, ஒரு முஸ்லிம் எம். எல். ஏ. சட்ட சபையில் ஆவேசமாகப் பேசி வரும்போது, "எங்கள் மதுரை மீனாக்ஷி அம்மன்!" என்று தமமை மறந்து கூறியதைக் குறிப்பிட்டார். "தமிழ் நாட்டில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் என்றென்றைக்கும் சகோதரர்கள்போல் வாழலாம். சண்டை சச்சரவுக்குக் காரணமே இல்லை" என்றும் கூறினார்.

திருநெல்வேலியில் தேசிய முஸ்லிம் பிரமுகர் ஜனாப் வி. எஸ். டி. முகம்மது இப்ராஹிம் அவர்களின் வீட்டில் சபாநாயகருக்கும் கல்கி ஆசிரியருக்கும் சிற்றுண்டி விருந்து நடந்தது.



அன்று மாலை சபாநாயகர் ஸ்ரீ சிவசண்முகம் அவர்களின் தலைமையில் வீரவநல்லூர் கிராமத்தில் ஆலயப் பிரவேச வைபவம் மேளதாளங்களுடனும் பொது ஜன ஆரவாரத்துடனும் நடைபெற்றது. பிறகு அம்பாசமுத்திரத்திலுள்ள கண்ணன் கோவிலில் சுவாமி தரிசனம் செய்தோம். அம்பாசமுத்திரம் காங்கிரஸ் கமிட்டியாரும் பஞ்சாயத்தாரும் சேர்ந்து நடத்திய சிற்றுண்டி விருந்துக்குப் பிறகு பாபநாசத்துக்குச் சென்றோம். பாபவிநாச சுவாமியையும் லோகநாயகி அம்மனையும் தரிசித்துவிட்டு, நேரே தென்காசிச் சாலையில் பிரயாணமானோம். வழியில் விக்கிரமசிங்கபுரத்தில் சிலர் கும்பலாக நின்று வண்டியை வழி மறித்து நிறுத்தினார்கள். "கொண்டு வா, விளக்கை!" என்று கூவினார் ஒருவர். சபாநாயகரின் முகத்தை விளக்கு வெளிச்சத்தில் பார்த்துவிட்டு, "இவர்தான்!" "இவர்தான்!" என்று கூச்சல் போடவும், சபாநாயகரைக் காப்பாற்றும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டுவிட்டதாக எண்ணினேன். அதற்குள் அவர்கள் சபாநாயகரைச் சூழ்ந்து கொண்டார்கள். சூழ்ந்து கொண்டு கழுத்திலே பல நூல் மாலைகளைப் போட்டுவிட்டுப் பல தடவை 'ஜே ஹிந்த்' கோஷமும் போட்டார்கள்.

ஆகக்கூடி அதிகச் சேதம் ஒன்றுமில்லாமல் இரவு பத்து மணிக்குத் தென்காசியை அடைந்தோம். அங்கேயும் கோவில் வாசலில் பொது ஜனங்களோடு போலீஸ் அதிகாரிகளும் காத்திருந்தார்கள். ஆகவே தென்காசி விசுவநாதஸ்வாமியையும் அவசர அவசரமாகத் தரிசித்துவிட்டுக் குற்றாலத்தில் வாழும் சிதம்பரநாத முனிவரின் இல்லத்துக்குப் புறப்பட்டோம். தென்காசிக்கும் குற்றாலத்துக்கும் மத்தியில் மேலகரம், சித்தாமணி என்னும் இரண்டு கிராமங்களின் ஊர்ஜனங்கள் சபாநாயகர் தங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர் என்ற உரிமை பாராட்டி, உபசாரம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். அவற்றை ஏற்றுக் கொண்டு சபாநாயகரும் உரிமையுடன் அவர்களுக்குச் சில புத்திமதிகளைக் கூறினார். கடைசியாக நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குக் குற்றாலம் போய்ச் சேர்ந்த போது, குற்றால நாதர் அதுவரை தூங்காமல் சபாநாயகருக்குப் பேட்டி கொடுப்பதற்காகக் காத்திருக்கிறார் என்ற செய்தி வந்தது. அவ்வளவுதான்; காரிலிருந்து இறங்கிய சபாநாயகர் உடனே மேல வேட்டியை இடுப்பில் கட்டிக் கொண்டு கோவில் எந்தப் பக்கம் இருக்கிறது என்றுகூடத் தெரிந்து கொள்ளாமல் கிளம்பி விட்டார்! சரியான வழியில் அவரைத் திருப்பி ஆலயத்துக்கு அழைத்துச் சென்று சுவாமி தரிசனமும் செய்து வைத்தார்கள். குற்றாலம் கோயில் பிராகாரத்தில் இருந்த அகஸ்தியர் சந்நிதியில் சபாநாயகர், "தமிழுக்கு மரியாதை செய்ய வேண்டும்" என்று சொல்லிக் கொண்டு தரையில் விழுந்து நமஸ்கரித்தார்.

பிறகு ரசிக மணியின் இல்லத்துக்குச் சென்றோம். டி. கே. சியின் புன்னகை தவழ்ந்த முகத்தையும் அன்பு ததும்பிய உபசார வார்த்தைகளையும் கேட்டதும் எங்கள் பிரயாண அலுப்பெல்லாம் பறந்து போய் விட்டது.

சபாநாயகர் சிவசண்முகம் குற்றாலத்தில் ரசிகமணியின் விருந்தாளியாக இருந்தார். இந்தக் கட்டுரை எழுதிய சின்ன அண்ணாமலையும் கூடத்தான்!



திருமலை முருகன்

தென் பாண்டிய நாட்டில் "கடலாடி மலையாடுதல்" என்று ஜனங்கள் சொல்லுவதுண்டாம். அதாவது திருச்செந்தூர்க் கடலில் ஸ்நானம் செய்து அலைவாய் முருகனைத் தரிசித்த பிறகு, திருமலைமேல் ஆடிக் கொண்டே ஏறிக் குன்றக் குடிகொண்ட முருகனைத் தரிசிப்பது வழக்கமாம். அதன்படியே மறுநாள் காலையில், குற்றாலத்துக்குச் சுமார் பத்து மைல் தூரத்திலுள்ள திருமலைக்குச் சென்றோம்.



திருமலை முருகன் கோயிலுக்கு அடியார்கள் பக்தி பரவசத்துடன் விரைந்து செல்லும் காட்சி.

தென்காசி போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் எங்களுடன் திருமலைக்கு வந்திருந்து தரிசனம் செய்வித்தார். திருமலைக்குப் போகும் வழியில் திருவாங்கூர்ப் பிரதேசம் குறுக்கிடுவதால், நாலு இடத்தில் சுங்கப் பரிசோதனை நடக்க வேண்டும். சபாநாயகரிடம் முருகனுடைய பக்தியைத் தவிர வேறு கள்ளமார்க்கெட் சரக்கு எதுவும் இல்லை என்றாலும், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சபாநாயகருடன் வந்தபடியால் பரிசோதனைத் தடங்கல் இல்லாமல் பிரயாணம் சௌகரியமாயிருந்தது. திருமலையும் அதன் மேலுள்ள முருகன் கோவிலும் மிக அழகு வாய்ந்தவை. வெகு சுத்தமாகவும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தெய்வீக அழகு வாய்ந்த ஆலயத்தில், மனோரம்யமான காலை நேரத்தில், கோயில் அதிகாரிகள் முருகனை அற்புதமாக அலங்கரித்து வைத்திருந்தார்கள். சபாநாயகரும் தாம் வழிபடும் குலதெய்வமான முருகனைப் பக்தி பரவசத்துடன் தரிசித்து மெய் மறந்து நின்றார். அவருக்குச் சுய உணர்வு வரும்படி செய்து அழைத்துக் கொண்டு திரும்பினோம். 'கொடுக்கிற தெய்வம் கூரையைப் பொத்துக் கொண்டு கொடுக்கும்' என்பார்கள். அதுபோல் வழியில் இலஞ்சி என்னும் அழகான கிராமத்தில் குமாரர் கோவில் தரிசனமும் கிடைத்தது. அதோடு ஸ்ரீ துரைராஜ பாண்டியன் எம். எல். ஏ. அவர்களின் வீட்டில் விருந்தும் நடந்தது.

முடிவுரை

அன்றிரவும் மறு நாளும் குற்றாலத்தில் டி. கே. சி. யின் இல்லத்தில் விருந்துண்டு, செவிக்கினிய தமிழ் விருந்தும் அருந்திவிட்டுச் சபாநாயகர் தென்காசியில் ரயில் ஏறினார். நானும் அவருடன் புறப்பட்டேன்.

சென்னையை நோக்கித் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸின் சக்கரங்கள் அதிவேகமாகச் சுழன்று சென்றபோது, என் மனக் கண் முன் சென்ற நாலு தினங்களின் பிரயாண அநுபவங்களும் ஞாபகங்களும் சுழன்று சுழன்று வந்து போய்க் கொண்டிருந்தன.

ஒவ்வொரு ஊரிலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்—முக்கியமாகப் போலீஸ் அதிகாரிகள்—சென்னை மாகாணத்தின் சபாநாயகருக்குரிய மரியாதைகளைச் செய்து, பிரயாண வசதிகளைச் செய்து கொடுத்ததோடல்லாமல், ஆலயங்களில் ஜனக் கூட்டங்களைச் சமாளிக்க வேண்டியிருந்த போது, சாக்ஷீகமாக ஒத்துழைத்ததையும் அடிக்கடி நினைத்துப் பார்க்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு ஆலயத்திலும் கோவில் நிர்வாக அதிகாரிகள் சபாநாயகரின் வரவேற்புக்குத் திறமையான ஏற்பாடுகள் செய்திருந்ததும், அர்ச்சகர்கள் ஆயிரம் வருஷத்து மூடக் கொள்கைகளை உதறி எறிந்து விட்டுச் சபாநாயகருக்குப் பரிவட்டம் கட்டுதல் முதலிய மரியாதைகளுடன் சுவாமி தரிசனம் செய்வித்ததும் அடிக்கடி நினைவுக்கு வந்தன.

திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த காங்கிரஸ் ஊழியர்கள்—முக்கியமாக, ஸ்ரீ சோமயாஜுலு, ஸ்ரீ மெகநாதன், ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் ஆகியவர்கள் எப்படிப்பட்ட அற்புதமான காரியத் திறமை வாய்ந்தவர்கள் என்பதும், அவர்கள் தங்களுடைய சுயநலமற்ற தொண்டினால் பொது மக்களின் அன்பை எப்படிக் கவர்ந்திருக்கிறார்கள் என்பதும் என்றைக்கும் அழியாதபடி என் மனத்தில் பதிந்திருந்தன.

இவ்வளவையும் மகிழ்ச்சியுடன் எண்ணிப் பார்த்துவிட்டுக் கடைசியில் நான் கண்ணயரும்போது, ஓடும் ரயிலின் சக்கரங்கள் எழுப்பிய தாளத்துடன் கூடிய ஓசையானது, "ஹிந்து மதம் எங்கள் சொந்த மதம்!" என்ற மெகநாத கோஷமாகவே என் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது!

வான சஞ்சாரம்

இசைத்தேனி

மே மாதம் 20-ந் திருச்சியில் கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளையின் வயலின் கச்சேரி குறிப்பிட்டபடி மூன்று நேர நிகழ்ச்சியாயில்லை. இந்தியா மந்திரி வியாகத் தனிகாஸ் அவர்களின் பேச்சுக்காக அரை மணி நேரம் குறைக்கப்பட்டது. வாசித்தவரை வாத்யம் நாதமயமாயிருந்தது. தன்யாசி, சாவேரி, தேவகாந்தாரி ராகங்கள் அழகு வடிவங்களாய் வெளிவந்தன.

27-ந் திருச்சியிலிருந்து கேட்ட மதுரை மணி அய்யர் கச்சேரி வழக்கம்போல் உயர்தரமாயிருந்தது. பூர்விகல்யாணி, தோடி, கடையில் ஒரு ராகமாலிகை சிறப்பாயிருந்தன. உருப்படிகளிலும் ஸ்வரப்ரஸ்தாரங்களிலும் அவரது தனி வைகரிகளைக் காட்டினார்.

28-ந் சென்னையில் பாருபள்ளி ராமகிருஷ்ணய்யா பந்துலுவின் சங்கராபரண ராகம் பல்லவிக் கச்சேரி எதிர்பார்த்ததுபோல் ஞான பாவம் நிறைந்திருந்தது. சாரீரமும் சௌகர்யமாக வாய்த்ததால் பாடகர் உற்சாகமாய்த் தன் திறமையை நன்கு வெளிப்படுத்தினார். கனகராஜ பஞ்சகத்தைத் தானத்தில் அமைத்து விளக்கியது விசேஷம்.

30-ந் சென்னையில் தேவகோட்டை நாராயணய்யங்கார் மூக்கால் மணி நேரம் வீணை கானத்தைச் சுகமாய்ப் பொழிந்தார். சாமா, கல்யாணி, காபி ராகங்களும், உருப்படிகளும் தெளிவு, அழுத்தம், கமகப்பொழிவு இவை கொண்டு நற்சொரூபங்களாயிருந்தன.

31-ந் சென்னையில் தண்டபாணி தேசிகர் கீரவாணி, மலயமாருதம், தோடி இவையோடு இறுதியில் ஒரு ராகமாலிகையையும் பாவம் ததும்ப வழங்கினார். தோடியில் பிர்க்கா வேலைப்பாடுகள் அதிகம் கேட்டன.

• • •

மற்றக் கச்சேரிகளில் மே 21-ந் திருச்சியிலிருந்து கேட்ட கே. வாசுதேவனின் கானம் குறிப்பிடத் தக்கது. தோடி, அடாணா, காம்போதி ராகங்கள் அவரது தேர்ச்சியை நன்கு எடுத்துக் காட்டின.

22-ந் சென்னையில் நடந்த டி. ஆர். பாலசுப்ரமணியத்தின் கச்சேரியில் எதிர்பார்த்த பிர்க்கா வழியின்மையாது பெரும்பாலும் நிதானம் கண்டது விசேஷம். வராளி, ஹம்ஸாநந்தி ராகங்கள் வெகு நயமாயிருந்தன.

23-ந் திருச்சியில் எம். ரங்கநாதனாரின் நய சாரீரத்தில் நல்வழியுடன் மலயமாருதம், கீரவாணி, தோடி ராகங்களைத் தெளிவாய் வழங்கியது கவனத்தைக் கவர்ந்தது.

24-ந் சென்னையிலிருந்து கேட்ட ஒரு பெண்மணியின் கானம் கம்பீரமாயிருந்தது. மதுரமான குரலில் தெளிந்த ஞானமும், குறிப்பிடத்தக்க பாணியும் கொண்டு, சங்கராபரணம், ரீதிகௌளை ராகங்களும் உருப்படிகளும் அமைப்பு வடிவங்களாய் வெளிவந்தன. பாடியவர் சாவித்ரி ஸ்ரீனிவாஸன்.

25-ந் திருச்சியில் நடந்த காமா கிருஷ்ணமூர்த்தியின் கச்சேரி அவ்வாரத்திய முதல்தர நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். பைரவி, கேதாரகௌளை, பந்துவராளி ராகங்களைத் தைரியமாய்க் கற்பனைப் பொழிவுடன் அமைத்தார்.

26-ந் சென்னையில் பாடிய எம். கல்பகத்தின் கல்யாணியும், அதன் உருப்படி ஸ்வரப்ரஸ்தாரங்களும் நாதமயமாயிருந்தன.

அன்று அதே நிலையத்தில் என். சங்கரன் காம்போதி, மத்யமாவதி ராகங்களை நல்வழியில் கையாண்டது கவனத்தை ஈர்த்தது.

27-ந் சென்னையில் நடந்த களக்காடு மகாதேவனின் கச்சேரி எதிர்பார்த்ததுபோல் உயர்தரமாயிருந்தது. தர்பார், காம்போதி ராகங்கள் கனிவாயிருந்தன.

30-ந் சென்னையில் டி. என். வெங்கடராமய்யரின் கானம் குறிப்பிடத்தக்கது. மார்க்க ஹிந்தோளம், தோடி ராகங்களைத் திறம்பட வழங்கினார்.

ஜூன் 1-ந் சென்னையில் சுந்தரி தர்மிஷ்டவன் நிறைந்த குரலில் நாட்டைக்குறிஞ்சி, ஸிம்மேந்திரமத்யம ராகங்களையும் உருப்படிகளையும் சக்கை போடு போட்டார்.

2-ந் சென்னையில் ஸ்ரீ. சுப்புலக்ஷ்மியின் வாய்ப்பாட்டும், ஆர். சியாமளா தேவியின் வீணைகானமும் சுகமாயிருந்தன. முன்னவரது ஸிம்மேந்திரமத்யமமும், பின்னவரது மணிரங்கும் கவனத்தைக் கவர்ந்தன.



அங்கயற்கண்ணி

அநுத்தமா



தஞ்சாவூர் ராமய்யா தனது நாதஸ்வரத்தின் மூலம் அபரிமிதமான சங்கீதத்தைப் பொழிந்து கொண்டிருந்தான். எங்கள் ஊர் உற்சவத்திற்கு அவனை அழைத்திருந்தது, எங்களுக்கெல்லாம் எவ்வளவோ பெருமையாயிருந்தது. இப்பொழுது அவன் ராகமாலிகை வாசிக்க ஆரம்பித்து விட்டான். நடுத்தெருவில் ஸ்வாமியையும் அம்மனையும் எழுந்தருளச் செய்துவிட்டு, எல்லோரும் மெய் மறந்து அவன் சங்கீதத்தை அனுபவித்துக் கொண்டிருந்தோம். ராமய்யா ஸ்வரங்களை உதிர்த்துத் தள்ளினான். அவை காற்றுடன் கலந்து எங்கள் பெருமையையும் ராமய்யாவின் மேதையையும் காட்ட வெகு தூரம் சென்றன.

"ஹரா ஹரா ஹரா" என்ற கோஷம் வேத பாராயண கோஷத்துடன் கலந்து கொண்டது. "சாயங்காலம்தான் அவன் கச்சேரி இருக்கிறதே, இப்பொழுது எதற்கு இப்படி ஸ்வாமி ஊர்வலத்தைத் தாமதப் படுத்துகிறான்?" என்றார் என் பக்கத்தில் இருந்த ஒரு பேர்வழி.

"அட மனுஷா!" என்று நினைத்துக் கொண்டு, அந்த ஞான சூன்யப் பேர்வழியை விட்டு அப்பால் நகர்ந்தேன். அப்பொழுது தான் ஓர் அதிசயக் காட்சியைக் காண நேர்ந்தது.

ஓர் இடைப் பெண் தலையில் ஒரு கூடையுடன் நின்றுகொண்டிருந்தாள். அந்தக் கூடையில் ஒரு பெரிய பானை; அதன்மேல் மற்றொரு பானை; அதற்கும் மேலே ஒரு பித்தளைப் பாத்திரம் — இவ்வளவையும் சுமந்துகொண்டு, அவள் இரு கைகளையும் கூப்பி, ஸ்வாமியை வணங்கியபடி நின்றாள்.



குடை விழுந்து தொலையப் போகிறதே என்று என் மனதில் அச்சம் தோன்றிற்று. அவளிடம் சொல்வோமா என்று நினைத்தவாறு அவளை நெருங்கினேன். ஆனால் ஒரு கணம் அப்படியே மெய்மறந்து நின்று விட்டேன். அவள் சுவாமியையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். அவளுக்குத் தான் என்ன தெய்வ பக்தி!

நான் ஏதும் சொல்வதற்குள்ளேயே, அவள் சடக் கென்று வலக்கையால் குடையைப் பிடித்துக் கொண்டு, திரும்பி வேகமாக நடக்கலானாள். நானும் என்னையறியாமல் அவளைப் பின் தொடர்ந்தேன்.

அந்தக் கும்பலில் அவள் வெகு சுலபமாக வளைந்து வளைந்து, கையால் கம்பீரமாக வழியில் இருப்பவர்களை விலக்கிக் கொண்டு சென்றாள். அந்தக் கையின் அசைவில் தான் என்ன லாகவம், என்ன அலக்ஷியம்! அந்தக் கும்பலில் அவளைப் பின்தொடர நான் பட்ட பாடு, அப்பொழுது பவனி வந்து கொண்டிருந்த சுந்தரேசருக்குத் தான் வெளிச்சம்!

நான் திடுக்கிட்டேன் — அவள் என் வீட்டின் வாசலிலேயே நின்று விட்டாள். அவளைக் கண்டதும் என் மனைவி சாவித்திரி சிரித்துக்கொண்டே வந்து, தயிர் வாங்கிக் கொண்டு போனாள். அதை உள்ளே வைத்துவிட்டுத் திரும்பி வந்து, "இந்தாடி, குழந்தையை வைத்துக் கொள். நான் சுவாமியைப் பார்த்து விட்டு வருகிறேன்" என்று குழந்தையை அவளிடம் கொடுத்து விட்டுப் போனாள். குழந்தை ராஜாவும் அவளிடம் கொஞ்சி விளையாடினான்.

அப்பொழுதுதான் நான் அவளை நன்றாகக் கவனிக்க முடிந்தது. அவளுக்குப் பதினாறு வயது இருக்கும். யௌவனத்தின் அழகு பொலிவு பெற்று விளங்கியது. இடுப்பில் சிவப்புப் புடவையுடனும், உடம்பில் மஞ்சள் பூச்சுடனும் தங்கப் பதுமை யென விளங்கினாள் அவள். விசாலமான நெற்றியிலே பூசணி விதையைப்போல் குங்குமத் திலகம் இட்டுக் கொண்டிருந்தாள். கைகளில் பல வர்ணக் கண்ணாடி வளையல்கள்; கழுத்தில் கருகுமணி மாலை; தலையை அசட்டையாக அள்ளிச் செருகி யிருந்தாள். கட்டுக்கு அடங்காத கூந்தல் இழைகளிலே இரண்டு மூன்று முன்னே வந்து காற்றில் மெதுவாக அசைந்தாடியது, அவள் முகத்துக்கே ஒரு தனி அழகைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

"உன் பெயர் என்ன?" என்றேன் நான்.

அவள் வாய் திறவாமல் சுண்டு விரலால் தன் இரு கண்களையும் மை விடுவதுபோல் நீட்டிக் காண்பித்தாள்.

"கண்ணம்மாவா?" என்றேன்.

அவள் 'இல்லை' என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்து விட்டு,

இரண்டாவது 4 பரிசுக் கதை



மீனாக்ஷி அம்மன் கோவிலை நோக்கிக் கும்பிட்டாள். பத்து வருஷம் பரத நாட்டியம் பழகினவர்கள்கூட அவ்வளவு லாகவத்துடன் அபிநயம் பிடிக்க முடியாது என்று தோன்றியது எனக்கு.

"மீனாக்ஷியா?" என்றேன்.

"இல்லை" என்று தலையை அசைத்தாள்.

"விசாலாக்ஷியா?" என்றேன்.

அவள் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. என் மட்டித்தனத்தைக் கண்டு அவள் கேலிப் புன்னகை பூத்தாள் போலும்!

அதற்குள் என் மனைவி திரும்பி வந்து விடவே, அவளிடம் குழந்தையைக் கொடுத்து விட்டுக் கூடையை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டாள் அந்த இடைப் பெண். போகு முன் கடைக்கண்ணால் என்னை ஒரு பார்வை பார்த்து விட்டுச் சென்றாள். நான் அகமகிழ்ந்தேன்.

"சாப்பிட வில்லையா?" என்ற என் மனைவியின் குரல் என்னை இந்த உலகத்துக்குக் கொண்டு வந்தது. நான் உள்ளே சென்றேன். அந்தப் பேரழகியைப் பற்றி அறிந்து கொள்ள அவாக் கொண்டு, "ஆமாம், நீபாட்டுக்குக் குழந்தையைத் தயிர்க்காரி கிட்டேயும் பால்காரி கிட்டேயும் கொடுத்துவிட்டுப் போய் விடுகிறாயே!" என்று பேச்சைத் துவக்கினேன்.

"ஏன், நீங்கள்தான் காவல் இருந்தீர்களே!" என்று சொல்லிச் சிரித்தாள் சாவித்திரி.

"அந்தப் பெண் யார்?"

"அவளா, பால்காரப் பார்வதியின் பெண். அழகாக யில்லையா, அவள்?"

"அதனால்தான் கேட்டேன். அவளுக்கிருப்பது போல் நீண்ட கருவிழிகள் தோன்ற நீங்களெல்லாம் மையைத் தீட்டிக் கொண்டு என்ன பாடு படுகிறீர்கள்!" என்று நான் சிரித்தேன். என் மனைவியும் சிரிப்பில் கலந்து கொண்டாள்.

"அவள் கண்களை நீங்களும் கவனித்தீர்களா? எனக்கு அவைகளைப் பார்க்கும்போதெல்லாம் பாபனாசத்து மீன்களின் ஞாபகம் வரும்!" என்றாள் சாவித்திரி. என் மூளையும் ஏதோ யோசனை செய்ய ஆரம்பித்தது. பளிச் சென்று அந்தப் பெண்ணின் பெயர் எனக்குத் தெரிந்து விட்டது. சாவித்திரி கயல் மீன்களைப் பற்றிப் பிரஸ்தாபித்ததும் தான் என் மூளைக்கு அது எட்டிற்று. அங்கயற் கண்ணி! என்ன பொருத்தமான பெயர்! அதுதான் அவள் மீனாக்ஷி அம்மன் கோவிலை நோக்கிக் கும்பிட்டிருக்கிறாள்!

என் மனைவி மேலும் பேசிக் கொண்டே போனாள்:

"அதுவும் இன்றைக்கு அவள் தோற்றம் எவ்வளவு அழகாயிருந்தது! அவள் சிவப்புப் புடவையும், மஞ்சளும் குங்குமமும், அவள் கூந்தலை அள்ளிச் செருகி யிருந்ததும், அதன்மேலிருந்த பூவும், உருக்கி வார்த்தது போல் இருக்கும் அவளது தேகமும், சாந்தமான சிரிப்பும், குறுகுறுப்பான பார்வையும் மீனாக்ஷி அம்மனை பிரத்தியக்ஷமாக வந்தது போலல்லவா இருந்தது!"

எனக்கு மயிர்க் கூச்செறிந்தது. ஆம், அப்படித்தான் காட்சி அளித்தாள் அந்தப் பெண். அந்த முகம் தெய்விக சோபையுடன்தான் விளங்கிற்று.

"அவளுக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்தால்......?" என்றேன் நான்.

"ஆமாம், காசு வந்து குவியும். பணச் செருக்கு வந்து விடும். அவள் களங்கமற்ற உள்ளத்தின் அழகு முகத்தில் இப்பொழுது பிரதிபலிக்கிறது; அது போய் விடும்; அதிருப்தி வந்துவிடும்!"

"அவளுக்கு நாட்டியம் வேண்டாம்; இப்படியே தயிர் விற்றுக் கொண்டிருந்தால் போதும் என்கிறாயாக்கும்!"

"என், அதில் அவள் சந்தோஷமே அடைகிறான். அவளுக்கேற்ற கணவன் வாய்க்க வேண்டுமே என்பதுதான் என் கவலை. அழகில் அவளுக்கு ஈடு கிடையாது. எந்தக் குடியன் காத்துக் கொண்டிருக்கிறானோ, அவள் அழகை வாயில் போட்டுக்கொள்ள!" என்று வருத்தப்பட்டாள் சாவித்திரி.

மறுநாள் காலை அந்தத் தயிர்க்காரப் பெண்ணின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் கூடையைக் கீழே வைத்ததும் வைக்காததுமாய், "உன் பெயர் அங்கயற்கண்ணியா?" என்று கேட்டேன். "ஆமாம்" என்று அவள் தலையை ஆட்டினாள். முத்து முத்தான பல் வரிசைகள் மின்னல் போல் தோன்றி மறைந்தன. செக்கச் செவேல் என்று அவளது அதரங்கள் வெற்றிலைப் பாக்குடன் விளங்கின. "உனக்குக்கூடத் தெரிந்து விட்டதே!" என்பது போல இருந்தது அவள் சிரிப்பு. மறுகணம் தலை கவிழ்ந்தாள். ஆனாலும் அந்த இமைகளால் அவள் கண்களின் சஞ்சலத்தை மறைக்க முடியவில்லை; லஜ்ஜையால் முகம் சிவந்து விட்டது. நான் எழுந்து உள்ளே சென்று விட்டேன்.

★

அடுத்த நாள் எங்கள் வீட்டு வேலைக்காரி சண்டை போட்டுக் கொண்டு நின்று விட்டாள். ஆகவே, அன்று என் மனைவி அங்கயற்கண்ணியைக் கூப்பிட்டு வீட்டு வேலைகளைச் செய்யச் சொன்னாள். அவள் கையை வீசித் துடைப்பத்தைப் போட்டுப் பெருக்கும்போது, ஏதோ அபிநயம் பிடிப்பதாகவே எனக்குத் தோன்றிற்று! அவள் தன் வேலைகளைச் சீக்கிரமே முடித்துக்கொண்டு தயிர் விற்கக் கிளம்பி விட்டாள்.


அதிலிருந்து அங்கயற்கண்ணி எங்கள் வீட்டிலேயே வேலை செய்ய ஆரம்பித்து விட்டாள்; தயிர் விற்கும் வேலையை அவள் தாயாரே எடுத்துக் கொண்டு விட்டாள்.

வீட்டில் எல்லா வேலைகளும் நன்றாக நடந்தன. காலையில் ஐந்து மணிக்கே அங்கயற்கண்ணி வந்து விடுவாள். சாயங்காலம் வரை எங்கள் வீட்டிலேயே இருப்பாள். சாவித்திரி என் என்பதற்கு முன் என்னெய் என்று நிற்பாள் அவள். ஒரு விசேஷம் என்னவென்றால், அவள் என் எதிரில் நின்று பேசினதே கிடையாது. அவள் எஜமானியுடனாவது ஏதாவது பேசுவாளோ என்னமோ எனக்குத் தெரியாது. அவர்கள் ஒருவரை யொருவர் மானசீகமாக அறிந்து காரியம் செய்வார்கள் போலும்!

முன்பு இருந்த வேலைக்காரிக்கும் என் மனைவிக்கும் எப்பொழுதும் வாக்குவாதம் நடக்கும். வேலைக்காரக் கந்தனும் அந்த வேலைக்காரியைக் கண்டால் எரிந்து விழுவான். இப்பொழுது அவன் அங்கயற்கண்ணியிடம் எரிந்து விழுவதே யில்லை. ஆகவே, அழகும் அமைதியும் எங்கள் வீட்டில் குடிகொண்டன. வீடு சுத்தமா யிருந்தது.







தன் வேலை முடிந்ததும், குழந்தை ராஜாவைத் தூக்கி வைத்துக் கொள்வாள் அங்கயற்கண்ணி. அவனுடன் ஏதோ கொஞ்சுவாள். ஆனால் நானோ, கந்தனோ வந்தால் சட்டென்று இறக்கி விடுவாள்.

கந்தன் பத்து வயதில் எங்கள் வீட்டுக்கு வந்தவன். பதினைந்து வருஷங்களாக எங்களுடனேயே இருக்கிறான். மூக்கும் முழியுமாய் நல்ல வசீகரமான தோற்றம். அகன்ற மார்புடன் திடகாத்திரமான சரீரத்தையும் பெற்றிருந்தான். அவனைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு அர்ச்சுனன் ஞாபகம் வரும்.

ஒரு நாள் திடீரென்று என் மனதில் ஓர் எண்ணம் உதித்தது. கந்தனுக்கு அவளைக் கொடுத்து விட்டால்......?

இந்த எண்ணத்தை சாவித்திரியிடம் தெரிவித்தேன். அவள் அதை ஆமோதிக்கவில்லை.

"அவன் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுவானா?" என்றாள்.

"அவளைக் காட்டிலும் அழகான பெண் அவனுக்குக் கிடைத்து விடப் போகிறாளா, என்ன?"

"இருந்தாலும் அவன் ஒத்துக் கொள்ளுவான் என்று எனக்குத் தோன்றவில்லை."

அதற்குள் எனக்கு அன்று நேரமாகி விடவே ஆபீஸுக்குப் போய்விட்டேன்.

மறு நாள் சாயங்காலம் கந்தனிடம் இந்த விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தபோது, அவன் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது!

★

இரண்டு நாட்கள் சென்றன. நான் சாவித்திரியிடம் அங்கயற் கண்ணியின் தாயாரிடம் இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லச் சொல்லி நச்சரித்தேன். அவள் என்னவோ அதில் ஊக்கம் காட்டவில்லை.

ஒரு நாள் நான் கொல்லைப்புறம் சென்ற போது, அவர்கள் இருவரும் அங்கே வேலை

செய்து கொண்டிருந்தார்கள். "ஏ புள்ளே, என்னைக் கல்யாணம் செய்து கொள்ள உனக்கு இஷ்டம்தானா?" என்று கேட்டான் கந்தன். அவள் என்னைக் கவனிக்க வில்லை.

அங்கயற்கண்ணி மௌனம் சாதித்தாள்.

"உன்னைத்தானே! சொல்லேன்!" என்று கந்தன் மீண்டும் கேட்டான்.

அவள் ஒரு கணம் அவனை உற்று நோக்கினாள். பிறகு 'மாட்டேன்' என்று தலையை அசைத்து விட்டாள்!

"ஏன்? வாயைத் திறந்துதான் சொல்லேன்!" என்றான் மீண்டும் கந்தன்.

அவள் மௌனம் அப்போதும் கலைய வில்லை. பேசாமல் தண்ணீர் தூக்கலானாள். கந்தன் அவளை நெருங்கி, "ஏன், உன் அழகுக்கு அரசன் வீட்டுப் பிள்ளை வரணும்னு நெனைச்சயோ?" என்று உறுமினான்.

நான் அவ்விடத்தை விட்டு நகர்ந்தேன். என் வேஷ்டியை அறைந்து துவைக்கும் சத்தத்தி லிருந்தே கந்தனின் கோபத்தை ஒருவாறு ஊகித்துக் கொண்டேன். அவன் தன்மேல் செலுத்த வேண்டிய ஆத்திரத்தை வேஷ்டியின்மீது செலுத்துவதை அவளும் புரிந்து கொண்டாள் போலும்; ஏனெனில், உடனே அவள் உள்ளே வந்துவிட்டாள். அவள் கண்களில் நீர் நிரம்பி யிருந்தது.

அன்று மாலை நானும் சாவித்திரியும் பேசிக்கொண் டிருந்தோம். நான் காலையில் நடந்ததை அவளிடம் சொல்ல வேண்டு மென்று வாயெடுத்தேன். அப்பொழுது கந்தன் அங்கே வந்தான். நான் வாயை மூடிக் கொண்டேன். சாவித்திரி அவனை நோக்கி, "என்னடா, மாப்பிள்ளை! ஏன் மூஞ்சியை அப்படித் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டாள்.

"அந்தப் பெண் நமக்கு வேண்டா மூங்க!" என்றான் அவன்.

சாவித்திரி என்னைப் பார்த்தாள். "நான் சொன்னது சரியாய்ப் போச்சு, பார்த்தீர்களா?" என்பதுபோல் இருந்தது அவள் பார்வை. நான் அதைக் கவனிக்காமல், "ஏன்டா வேண்டாமென்கிறாய்?" என்றேன்.

"அவ என்னைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டாளாம். 'ஏன்' என்றும் சொல்ல மாட்டாளாம்! வாய் திறந்துகூடப் பேசாமல் மூஞ்சியிலேயே அடிக்கிறாங்க, அது!" என்றான் அவன்.

"ஐயோ, உங்கள் இருவருக்கும் இது வரை தெரியாதா?" என்று கேட்டாள் சாவித்திரி.

"என்ன?" என்று கேட்டேன்.

"அவள் ஊமை!"

"ஆ! ஊமையா!" என்றேன் நான், திடுக்கிட்டு.

"அப்படியா சமாசாரம்! ஆனாலும் என்னங்க? அவ அழகு ஒண்ணே போதுமே!" என்றான் கந்தன்.

அவன் முகம் லஜ்ஜையுடன் மலர்ந்தது.


"இப்பொழுது என்ன சொல்கிறாய்?" என்று கேட்பதுபோல், நான் முகத்தில் வெற்றிக் குறியுடன் சாவித்திரியைப் பார்த்தேன்.

★

அந்த மாதமே கந்தனுக்கும் அங்கயற் கண்ணிக்கும் சம்பிரமமாக விவாகம் நடந்தது.

ஒரு வாரத்திற்குப் பிறகு ஒரு நாள், "எப்படியிருக்கிறார்கள், புதிய தம்பதிகள்?" என்று நான் என் மனைவியை விசாரித்தேன்.

"அதை ஏன் கேட்கிறீர்கள்! அவள் தன் கண்களின் மின்னல் வெட்டையும், துடிக்கின்ற உதட்டையும், வீசுகின்ற கையையும் வைத்துக் கொண்டு அவனை என்ன பாடு படுத்துகிறாள்!" என்று சொல்லிக் கலகல வென்று சிரித்தாள். ராஜா தனக்கும் என்னவோ புரிந்து விட்டாற்போல் எங்கள் சிரிப்பில் கலந்து கொண்டான்!



வீட்டுக்காரர்:—யாரையா, நீர்! சாப்பிடும் போது உள்ளே நுழையறீரே?
சாப்பிட வந்தவர்:—என்னையா இப்படி அவமானப்படுத்துகிறீர்கள்? நான் சம்பந்திக்கு நெருங்கிய உறவாக்கும்!
வீட்டுக்காரர்:—சம்பந்திக்கு உறவாவது, மண்ணாவது! இங்கே பூணூல் கல்யாணம்னா நடக்கிறது! போம், வெளியிலே!

அரசனும் விதூஷகனும்

விஜயம்

ஒரே ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தான். அந்த ராஜாவினிடமும், எல்லா ராஜாக்களிடமும் இருப்பது போல் ஒரு விதூஷகன் இருந்தான்.

அந்த விதூஷகன் ராஜ சபை கூடுவதற்கு முன் சபையில் ஆஜராகி விடுவான். மகாராஜா வந்ததும் கேலியும் தமாஷுமாகப் பேசி, அவரை ஆனந்தத்தினால் பேச முடியாமல் செய்து விடுவான். அரசன் சில சமயம் மிகவும் கோபத்துடன் சபைக்கு வருவதும் உண்டு. அப்பொழுது மந்திரிமார்களும் மற்ற பிரமுகர்களும்கூட அரசனிடம் பேசுவதற்குப் பயப்படுவார்கள். ஆனால் விதூஷகன் கொஞ்சங்கூடப் பயப்படமாட்டான். அரசன் கோபமாக வருகிறான் என்பதை யறிந்ததும் ஏதாவது பளிச்சென்று சிரிப்பு வரும்படி பேசுவான். உடனே அரசன் தன் கோபத்தை மறந்து கலீர் என்று சிரித்துவிடுவான். சபையிலும் எல்லோரும் சிரித்து விடுவார்கள்.



இப்படி விதூஷகன் எத்தனையோ தடவை சபையில் ஹாஸ்யமாகப் பேசி அரசனிடமிருந்து ஆயிரக்கணக்கில் பரிசு பெற்றிருக்கிறான். அரசனுக்கு மட்டும் அல்ல, மந்திரிமார்களுக்கும் மற்ற பிரமுகர்களுக்கும் கூட அவனைக் கண்டாலே ஒரே ஆனந்தந்தான்.

அன்று விதூஷகனுக்குப் பொல்லாத வேளை போலிருக்கிறது. அரசன் ஏதோ ஒரு காரணத்தால் மகா கோபத்தோடு சபைக்கு வந்திருந்தான். வழக்கம்போல் விதூஷகன் ஏதோ ஹாஸ்யமாகப் பேசினான். அரசனுக்கு அந்த ஹாஸ்யப் பேச்சு பிடிக்கவில்லை. அரசன் என்ற மரியாதை கொஞ்சங்கூட இல்லாமல் விதூஷகன் தன்னை அவமதித்து விட்டதாக அவன் மனதில் பட்டது. ஆகவே கோபத்தினால் மீசை துடிக்க, "மந்திரி, நம்மை மரியாதை யின்றிப் பேசிய இந்த விதூஷகனுக்கு மரண தண்டனை விதிக்கிறேன்! நாளைய தினம் அதை நீர் நிறைவேற்றி வையும். இப்போது இவனைச் சிறைச் சாலைக்குக் கொண்டு போம்!" என்று கூறிவிட்டுச் சிம்மாசனத்திலிருந்து இறங்கித் தன் அந்தப்புரத்துக்குச் சென்று விட்டான்.

* * *

மறு நாள் பொழுது விடிந்தது. ஊரில் விதூஷகனின் மரண தண்டனையைப் பற்றித்தான் எல்லோரும் பேசிக் கொண்டிருந்தனர். அரண்மனையைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் துக்கம் தாங்காமல் தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தனர்.

ஆயிற்று; மரண தண்டனை நிறைவேற்றி வைக்க வேண்டிய நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. ஜனங்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர். விதூஷகன் கை விலங்கு, கால் விலங்குகளுடன் ஒரு புறம் நின்று கொண்டிருந்தான்.

அந்தச் சமயம் அரசனுக்கு ஏனோ அவனிடம் இரக்கம் தோன்றியது— அவனை உடனே ராஜ சபைக்கு அழைத்து வரும்படி உத்தரவிட்டான். அடுத்த நிமிஷமே விதூஷகன் அரண்மனைக்குள் பிரவேசித்

தான். இருளடைந்திருந்த அவன் முகத்தில் ஒரு புதிய பிரகாசம் தோன்றியது. "அரசன் நம்மை மன்னித்து விடும்படி ஆண்டவன் அருள் புரிந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்" என்று எண்ணிக் கொண்டே வந்தான். ஊர் ஜனங்கள் அனைவரும் அவனைச் சூழ்ந்து வந்தனர். அவர்களும் விதூஷகனை அரசன் மன்னித்து விடுவான் என்ற நம்பிக்கையுடனே வந்தனர். ஆனால், அவர்கள் அரண்மனைக்குள் அனுமதிக்கப் படவில்லை. ஆகவே, அரண்மனையைச் சுற்றி அவர்கள் வளைத்து நின்றனர். "விதூஷகா, நீ எத்தனையோ வருஷமாக நம் அரண்மனையில் சேவை செய்திருக்கிறாய். ஆகையால், உன் கடைசி காலத்தில் உனக்கு ஒரு விசேஷ சலுகை யளிக்க விரும்புகிறேன். அதாவது, உன் மரண தண்டனையை நீ எப்படியும் ஏற்றுத்தான் ஆக வேண்டும்......!"

விதூஷகனின் தலை சுழன்றது. அரசன் மேலும் கூறினான்:


"......ஆனால், நீ தூக்கு மேடையில் மரணத்தை யடைய விரும்புகிறாயா? அல்லது, வேறு எந்த விதமாகவாவது நீ இறக்க விரும்புகிறாயா?"

விதூஷகன் என்ன சொல்லப் போகிறானோ என்று எல்லோரும் ஆவலுடன் கவனித்தனர்.

அவன் கம்பீரமாகத் தலை நிமிர்ந்து, "மகாராஜாவே, நான் வயோதிக மடைந்து இறக்க விரும்புகிறேன்!" என்றான்.

அரசனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவனுக்குத் தான் கொடுத்த வாக்குறுதியையும் அரசனால் மீற முடியவில்லை. ஆகவே, வேறு வழியின்றி உடனே விதூஷகனை விடுதலை செய்தான். அவனுக்கு வேண்டிய பரிசுகளையும் வழங்கினான். ஊர் ஜனங்களின் சந்தோஷத்திற்குக் கேட்க வேண்டுமா?

சர்வம் 'ஜீப்' மயம் ஜகத்!



அலங்கார ஆடைகள்! - -

- - நாலாயிரம் ரகங்கள்!!

உயர்தர பட்டுப் புடவைகள், பனாரஸ், பெங்களூர், ஆரணி, காஞ்சீபுரம், கொள்ளேகாலம், பெங்கால் பட்டுச் சேலைகள் 12 முதல் 19 முழம் வரையில் ஆயிரக் கணக்கான ரகங்களில் சாயத்திற்கும் பட்டிற்கும் உத்திரவாதத்துடன் அற்புதமான கலர்களில் அழகிய முந்திகள் ஜொலிக்கும் பார்டர்களுடன் மலிந்த விலையில் விற்கிறோம்.

இந்தியாவின் சிறந்த கற்பனை மிகுந்த கராச்சி, பனாரஸ் நெசவாளர்களால் அதியற்புதமாக நெசவு செய்த பனாரஸ், டிஷ்யூ, டாச்பான் சேலைகள் கொடிகளுடன் பூ வேலைப்பாடுகள் செய்த விதவிதமான பட்டுச் சேலைகள், தாவணி, தோவந்துகள், ஜரிகைச் சேலைகள், பலவித பூ வேலைப்பாடுகள் செய்த ரவிக்கைத் துண்டுகள், உயர்தர சில்க் பீஸ்கள், நவீன டிஸைன்களில் சில்க் ஷர்ட்டிங், சில்க் கோட்டிங், சில்க் பீஸ்கள், பட்டுக் கயிலிகள் முதலியன ஏராளமாக வந்துள்ளன.

பெங்கால் சில்க் சேலைகள் கண்கவர் கலர்களில் 12 முழம் முதல் 18 முழம் வரையில் நூற்றுக்கணக்கான டிஸைன்களில் வந்து குவிந்திருக்கின்றன.

மதுரை, கோயமுத்தூர், உறையூர், சேலம் முதலிய ஊர்களிலிருந்து 100 நெ. 80 நெ. 60 நெ. நூல்களில் தென்னிந்தியாவின் திறமை மிகுந்த நெசவாளர்களால் நேர்த்தியாக நெய்யப்பட்ட நூல் சேலைகள் சாயத்திற்கு உத்திரவாதத்துடன் சிறந்த பார்டர்கள், அற்புதமான முந்திகளுடன் 10 முழம் முதல் 18 முழம் வரையில் பல்லாயிரம் டிஸைன்களில் வந்து குவிந்துள்ளன.

நூலும் பட்டும் கலந்து நெய்த புதிய டிஸைன் சேலைகள், ரவிக்கைத் துண்டுகள், பாவாடைகள், ஷர்ட்டிங்குகள் ஏராளமாக வந்துள்ளன.

கல்யாணங்களுக்கு வேண்டிய வெண்பட்டு வேஷ்டிகள், அம்மையப்பன் பட்டு கயிலிகள், அங்கவஸ்திரங்கள், துப்பட்டாக்கள், சால்வைகள் நவீன டிஸைன்களில் வந்துள்ளன.

ஆரணி, காஞ்சீபுரம் பட்டுப் பாவாடைகள், நூல் பாவாடைகள் விசித்திரமான கலர்களில் விதவிதமான பார்டர்களில் ஏராளமாக வரவழைத்திருக்கிறோம்.

மதுரை, சேலம், கோயமுத்தூர், துயிலி 100 நெ. 80 நெ. மெல்லிய வேஷ்டிகள், கல்யாணங்களுக்கு வேண்டிய கோர்வைப்பட்டு வேஷ்டிகள், உயர்தர 10 × 6 ரகங்கள், 80 நெ. 60 நெ. சங்கு மார்க் கயிலிகள், பட்டுப் பதாறு ரகங்கள், அங்கவஸ்திரங்கள், டவல்கள் ஆயிரக்கணக்கில் குவிந்திருக்கின்றன.

பவானியின் சிறந்த நெசவாளர்களால் நேர்த்தியாக நெய்யப்பட்ட ஜமக்காளங்கள் பெட்ஷீட்டுகள் பல நூற்றுக்கணக்கில் விதவிதமான கலர்களில் ஏராளமாக வந்திருக்கின்றன.

ஆயில்கிளாத், பெட்ஷேறாஸ்டர்கள், வாயில்கள், வனப்புமிக்க வட மலையாளத்தில் திறமையுடன் தயாரிக்கப்பட்ட கோட்டிங், ஷர்ட்டிங் பீஸ்கள் முதலியன

சரசமான விலை! சுறுசுறுப்பான சப்ளை!!

அன்புகனிந்த வரவேற்பு நம்பிக்கையான இடம்!!

இன்றே வந்து பார்வையிடுங்கள்

★

கஸ்தூரிபாய் கம்பெனி

உயர்தர பட்டு, நூல் ஜவுளி வியாபாரிகள்

மேலவீதி : : சிதம்பரம்

குதிரை சவாரி

சுந்தா

☆

"சீலோ, சலோ!" என்று டாங்காக்காரன் கூறினான். சாட்டையைச் சுடக்கி விட்டான். சிட்டாய்ப் பறந்தது குதிரை. 'லால்கிலா' என்னும் செங்கோட்டைக்கு அடுத்தாற் போலுள்ள ரஸ்தாவை அடைந்ததும், குதிரைக்குத் தானாகவே குஷி உண்டாகிவிட்டது. நாலு கால் பாய்ச்சலில் காற்றைக் கிழித்துக்கொண்டு விரைந்தோடிற்று. டாங்காச் சக்கரங்கள் பூமிமேல் பதிந்து உருண்டதாகவே தோன்றவில்லை. ஆகாயக் கம்பிகளில் தொங்கும் ஊஞ்சல் போல ஆடிச் சென்றது. என் நண்பருக்கு உற்சாகம் தாங்கவில்லை. "பலே, பலே!" என்றார். "சலோ பவன கி சால்—ஜுகமே சலோ பவன கி சால்" என்று டாங்காக்காரன் பாடலானான்.

நண்பர் டெல்லிக்குப் புதிது. ரொம்ப முக்கியமான காரியமாகச் சென்னையிலிருந்து வந்தவர். அந்த முக்கியமான காரியத்தைக்கூடக் கவனிக்காமல், அவர் டாங்கா சவாரியிலேயே பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தார். சவாரி செய்கையில், சென்னைப் பட்டணத்து ஜட்கா வண்டிகளைத் திட்டிக்கொண்டேயிருந்தார். "நீங்கள் கொடுத்து வைத்தவர், ஸார்! டெல்லியிலேயே குடியிருந்து கொண்டு, குஷாலாக டாங்கா சவாரி செய்கிறீர்கள். எங்களைப் பாருங்கள்; பாடாவதி ஜட்கா வண்டியில் ஏறித் தலையை முட்டிக் கொள்கிறோம்" என்று, நிமிஷத்துக் கொருதரம் சொல்லிக் கொண்டேயிருந்தார்.

உண்மையிலேயே சொகுசான வண்டிதான் டாங்கா! நாலு பேர் தாராளமாக உட்காரலாம். அதுவும், நாற்காலியில் உட்காருவது போல் இரண்டு கால்களையும் தொங்கப் போட்டுக் கொண்டோ, அல்லது கால்மேல் கால் போட்டுக்கொண்டோ சவாரி செய்யலாம். தெருக் காட்சிகளைக் காண்பதற்குக் கழுத்தை வெளிநீட்டிக் கொள்ள வேண்டியதில்லை. நிமிர்ந்து தலை குனியாமல் ஜம்மென்று உட்கார்ந்து ஜிம்மென்று காட்சிகளைக் காணலாம்.




குதிரையோ தீச் சுடர் மாதிரி துடித்துக் கொண்டு நிற்கும். "சலோ!" என்று சொன்னாலே போதும்; சாட்டை மேலே விழப் பொறுக்காது. "அச்சா, கோடா! சபாஷ்!" என்று தட்டிக் கொடுக்கும் படியாகக் குதி போட்டு ஜதி போட்டு ஓடும்.

நான் இந்த ஊருக்கு வந்த புதிதில், என் நண்பரைப் போலத்தான் டாங்கா சவாரி செய்வதிலேயே சதா ஈடுபட்டிருந்தேன். பழைய டெல்லியிலிருந்து புது டெல்லிக்கும், புது டெல்லியிலிருந்து பழைய டெல்லிக்கும் நூறு முறை சவாரி சென்றேன். எங்கிலும் படபட தடதட வென்ற கன வேகந்தான். ஓடுகிற ஓட்டத்தில் கோட்டை வாசல்களும், கோரிகளும், கோபுரங்களும், மசூதிகளும் மின்வெட்டில் தெரியும் காட்சிகளெனச் சுழன்றோடும். கடை கண்ணிகளெல்லாம் குடை ராட்டினத் தொட்டில்கள் போல் சுற்றி வரும். மயிலழகிகளும் மானழகிகளும் கனவுப் பதுமைகள் போல் மினுக்கித் தளுக்கிக் கருத்தைக் கலக்கிவிட்டு மறைவார்கள். விசித்திரமான குல்லாய்களும், தொப்பிகளும், 'புர்க்கா' முகமூடிகளும், குஞ்சலங்களும் முன்னும் பின்னும் வீசியாடி விலகிச் செல்லும்.

வெண்ணிலவில் சவாரி செல்வது இன்னும் ஜோர்! பளிங்கு வீதியில் வெள்ளிப் புரவி பூட்டிய மல்லிகை ரதத்தில் சாரத்யம் செய்வது போன்ற பிரமை உண்டாகிறது. புரவியின் பாத தாளத்துடன் இதயம் ஆனந்தக் கூத்தாடுகிறது. பின்னர், டெல்லியின் அற்புதச் சரித்திரத்தில் சம்பந்தப்பட்ட புரவிகளெல்லாம் மனக் கண்ணெதிரே ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றித் தோன்றி மறைகின்றன:—

ஐந்து பஞ்ச கல்யாணிக் குதிரைகள் பஞ்ச பாண்டவர்களைப் பெருமையுடன் தாங்கிப் பவனி செல்கின்றன. தரை யதிர நுரை சிதற நீலவேணிக் குதிரை யொன்று வியாக்ர கதியில் தாவி வருகிறது. இடக் கரத்தால் அக் குதிரையின் வாய் வடத்

ளைப் பற்றிக் கொண்டும், வலக் கரத்தால் கன்னோஜ் ராஜகுமாரியை அணைத்துக் கொண்டும் வருகிறான் பிருதிவிராஜன். கஜினி சுல்தானின் ஆப்கன் குதிரைப் படைகள், அகழி சூழ்ந்த பெரும் கோட்டையை முற்றுகை இடுகின்றன. கண்ணீர் விட்டுக் கதறி யழும் கூர்ஜர ராணியை, அலாவுதீனிடம் ஒப்படைப்பதற்காகக் கரகர வென்று இழுத்துக் கொண்டு வருகிறது ஒரு முரட்டுக் குதிரை. ஒரு சாரிப் புரவிகள் ஹிந்து வீரர்களையும் இன்னொரு சாரிப் புரவிகள் துக்ளக்கின் வீரர்களையும் சுமந்து, கோர ரணகளத்தில் சாடுகின்றன. செம்புரவி யொன்று நகரத்துக் காட்சிகளைத் தைமூர் சுல்தானுக்குச் சுற்றிக் காட்டுகிறது. கறுப்புக் குதிரை ஒன்றின்மீது குதுப்தீன் எக்களிப்புடன் வீற்றிருக்கிறான். லகானைச் சுண்டி இழுத்துப் பின் கால்களில் குதிரையை நிற்கச் செய்து, தான் கட்டிய 'மீனாரை' அண்ணாந்து பார்க்கிறான். இன்னுமொரு ராஜபுதன இளவரசியை மணந்து கொண்ட பெருமையுடன், பால்நிறக் குதிரை மீதேறி ஊர்வலம் செல்கிறார் அக்பர் பாதுஷா. மட்டக் குதிரைகள் மீது ஔரங்கசீப்பின் டார்ட்டார் காவற் பெண்கள் உட்கார்ந்து ஜனானா மதில்களை அடுத்து சுற்றுகிறார்கள். நாதிர்ஷாவின் பாரசீக வீரர்கள் ஆவேசப் புரவிகளை அட்டகாசமாய் நடத்தி, வாள் கொண்டும் வேல் கொண்டும் அமளிதுமளி செய்கிறார்கள். வெட்டைக் குதிரை ஒன்றின்மீது நிக்கல்ஸன் தளபதி இங்கு மங்கும் பாய்ந்தோடி, "ஷூட், ஷூட்!" என்று கட்டளை யிடுகிறார். அம்பாரி வைத்த யானை வரிசைகளுக்குப் பின்னால், நூற்றுக் கணக்கான அலங்காரக் குதிரைகள் சதிர் நடை போட்டுப் பவனி வருகின்றன. லிட்டன் பிரபுவின் தலைமையில் உதயபுரி மகாராணா, ஜயபுரி மகாராஜா, போபால் பேகம், குவாலியர் ஸிந்தியா, இந்தோர் ஹோல்க்கார், பரோடா கெயிக்வார், ஹைதராபாத் நைஜாம், மைசூர் மகாராஜா முதலியோர் முத்தும் கெம்பும் வைரமும் ஜொலிக்க வீற்றிருக்கிறார்கள். "விக்டோரியா மகாராணி, வாழ்க!" என்ற கோஷம் வானைப் பிளக்கிறது.



குதிரைக ளெல்லாம் சற்றே மிரண்டு சமாளித்துக் கொள்கின்றன. கொண்டாட்ட பீரங்கிகள் முழங்க ஆரம்பிக்கவே குதிரைகள் மீண்டும் மிரண்டு, மீண்டும் சமாளித்துக் கொள்கின்றன!

சரித்திர ஏடுகளில் ஏறாத இன்னும் எத்தனையோ காட்சிகளிலும் சம்பவங்களிலும் புரவி சம்பந்தப் பட்டிருக்கிறது. மணி முடி தரித்த எத்தனையோ மன்னர்களை வெற்றிக் கோலத்துடன் ஏற்றிச் சென்றிருக்கிறது; எத்தனையோ மன்னர்களின் மணிமுடிகளைக் காலால் இடறித் தள்ளியுமிருக்கிறது. நல்லவர்களுக்கும் உதவியாயிருந்திருக்கிறது; கெட்டவர்களுக்கும் உதவியாயிருந்திருக்கிறது. எத்தனையோ உயிர்களை மாய்க்கச் சாதனமாயும், எத்தனையோ உயிர்களைக் காக்க வாகனமாயும் இருந்திருக்கிறது. எத்தனையோ காதலர்களைப் பிரித்திருக்கிறது; எத்தனையோ காதலர்களைச் சேர்த்திருக்கிறது. மனிதன் மேல் ஆசை சவாரி செய்ய, குதிரைமேல் மனிதன் சவாரி செய்கிறான்.

இத்தனையையும் பார்த்து ஏளனமாகக் கனைத்துக் கொண்டே, வெண்மையும் கருமையும் கலந்த காலப் புரவி ஓடுகிறது. அர்த்தமில்லா வீதியிலே, ஒரே திசையில், ஒரே வேகத்தில் ஓடிக்கொண்டேயிருக்கிறது. யாரையும் அது மதியாது; யாருக்கும் அது உடைமையுமல்ல.

நம்மில் ஒவ்வொருவருக்கும் சொந்தமான புரவி ஒன்று இருக்கிறது. அதற்கு லாயம் வேண்டாம்; லகான் வேண்டாம். புல்லும் கொள்ளும் வைக்க வேண்டாம்; தண்ணீர் காட்ட வேண்டாம். அன்பாகத் தட்டிக் கொடுத்தால் போதும், அதி வேகமாகப் பறந்து செல்லும். அதுதான் கற்பனைப் புரவி!

அதன்மீது அமர்ந்து வானவிற்பாலத்தில் ஏறி இறங்கலாம்; வாடாமலர்ச் சோலையில் சஞ்சரிக்கலாம்; இன்ப மணிப் புறாக்களுடன் கொஞ்சி விளையாடலாம். ஆனந்த நகரிலுள்ள அற்புதக் கோட்டையில் நடமாடலாம்; நீல வெளியிலே, மேலே மேலே பறந்து கொண்டேயிருக்கலாம்.

No. 1



சந்திர ஹாரம்

ஆசிரியர்: பிரேம்சந்த் | மொழிபெயர்ப்பு: ரா. வீழிநாதன்

— பதினோராம் அத்தியாயம் —

கோகுலாஷ்டமி

ரமாநாத்துக்கு வேலை கிடைத்துவிட்டது என்ற சமாசாரம் தெரிந்ததும் தயாநாதபாபு மிகவும் மகிழ்ச்சியுற்றார். கல்யாணம் ஆன சில தினங்களுக்குள்ளேயே, அவன் இப்படிப் பொறுப்பை உணர்ந்து நடக்க ஆரம்பித்து விடுவான் என்று அவர் கனவிலும் கருதவில்லை. "இடம் நல்ல இடம்தான். நாணயப் பொறுப்புடன் வேலை பார்த்து வந்தால நீ கூடிய சீக்கிரம் முன்னுக்கு வந்து விடலாம். பிறர் காசுக்கு ஆசைப்படாதே" என்று அவர் அவனுக்கு உபதேசித்தார்.

"உங்கள் உபதேசத்தை உங்களுக்கே வைத்துக் கொள்ளுங்கள். அதற்கும் நமக்கும் சரிப்பட்டு வராது!" என்று சொல்லி விடலாமா என அவன் ஒரு கணம் யோசித்தான். ஆனால் அவ்வளவு வெட்கம் கெட்டவனாக அவன் மனம் இடம் கொடுக்கவில்லை.

"ஆமாம், அந்த இடத்துக்கு முப்பது ரூபாய் சம்பளம் ஆயிற்றே! உனக்கு மட்டும் இருபது கொடுப்பானேன்?" என்று கேட்டார் தயாநாதபாபு.

"புது ஆளுக்கு உடனே முழுச் சம்பளமும் கொடுத்து விடுவார்களா? ஆறு மாதம், ஒரு வருஷம் பார்த்துக் கொண்டு தானே கொடுப்பார்கள்! ஆனால், வேலை தான் ரொம்பக் கஷ்டமானதா யிருக்கும் போலிருக்கிறது!" என்றான் ரமாநாத்.


"அப்படி யொன்றும் கஷ்டமானதாக இராது. இருந்தால்தான் என்ன? இந்தச் சின்ன வயதிலே அதற்கெல்லாம் பயப்பட்டால் முடியுமா?" என்றார் தயாநாதபாபு.

ரமாநாத் வேட்டகத்திலிருந்து கல்யாண காலத்தில் கிடைத்த பணத்தில் கொஞ்சம் மிச்சப்படுத்தி வைத்திருந்தான். போதாததற்குத் தன் சிநேகிதர்களிடமிருந்து, கொஞ்சம் கடன் வாங்கிக்கொண்டான். கடைக்குப் போய், தற்காலத்திய நாகரிகத்திற் கேற்ற கோட்டு, ஸூட்டு முதலியவைகள் தைத்துக் கொண்டான். 'டிப் டாப்'பாக உடை அணிந்து கொண்டு போனால்தான் ஆபீஸில் தனக்கு மதிப்பு உயரும் என்பது அவனுடைய எண்ணம். அவன் அணிந்திருக்கும் உடையைப் பார்த்து ஜனங்கள் 'பெரிய உத்தியோகஸ்தன் போலிருக்கிறது' என்று எண்ணுவார்களே தவிர, 'அவனுக்கு என்ன சம்பளம்' என்பதை யாராவது விசாரிக்கப் போகிறார்களா? 'படாடோபத்துக்குத் தக்க வரும்படி கிடைக்கும்' என்பதை அவன் கண்கூடாகக் கண்டிருந்தான். 'நாற் சந்திகளில் நிற்கும் போலீஸ் கான்ஸ்டபிளுக்குக் காப்பிக்குக் காசு கொடுத்தால் போதும்' என்று நினைக்கும் ஜனங்கள், அதே இடத்தில் சார்ஜண்ட் நின்றால், காப்பிக்கு மட்டும் காசு கொடுக்கத் துணிகிறார்களா? கந்தைத்

துணி உடுத்திக் கொண்டு வரும் பிச்சைக்காரனுக்கு வசவுகள்தான் கிடைக்கின்றன. ஆனால், காஷாயம் தரித்துக் கையில் தடியுடன் காட்சியளிக்கும் சாமியாருக்கு, 'ஏதோ என்னால் ஆனது; பொன் வைக்கிற இடத்திலே புஷ்பம் வைக்கிறேன்! கூடவோ குறைச்சலோ, அன்புடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று கூனிக் குறுகிக்கொண்டு, வெகு சங்கோசத்துடன் ஒரு ரூபாயைக் கொடுக்கும்படி பாதிக்கிறது. இதிலிருந்து வேஷத்துக்கும் பிச்சைக்கும் வெகு காலமாகவே நெருங்கிய தொடர்பு உண்டு என்று தெரிகிறதல்லவா?

மூன்றாம் நாள் ரமாநாத் கோட்டு, ஸூட்டு, ஹாட்டு முதலியவைகள் அணிந்து கொண்டு வெகு மிடுக்குடன் ஆபீஸில் நுழைந்தான். அவனைக் கண்டதும், பியூன்கள் அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்து நின்று மிகவும் மரியாதையுடன் 'சலாம்' செய்தனர். அவன் ஹெட் ரமேஷ் பாபுவைப் போய்ப் பார்த்து விட்டுத் தன் வேலையை ஏற்றுக் கொள்ளுவதற்காக வெளியே வந்தான். வராந்தாவின் ஒரு மூலையில் கிழிந்து அழுக்கேறிப் போன ஜமக்காளம் ஒன்றில் சாயபு உட்கார்ந்திருந்தார். அவருக் கெதிரே ஒரு பெட்டியின்மேல் 'ரிஜிஸ்டர்' ஒன்று விரித்தபடி வைத்திருந்தது. சாயபுவைச் சுற்றி வியாபாரிகள் ஈயைப் போல மொய்த்திருந்தனர். எதிர்ப்புறத்தில் ஒற்றை மாட்டு வண்டிகள், பார வண்டிகள், குதிரை வண்டிகள் முதலியன நின்றுகொண்டிருந்தன. ஒவ்வொருவரும் 'நான் முந்தி, நீ முந்தி' என்று தன் வேலையை முடித்துக் கொள்ளுவதற்காக இடித்து மோதிக் கொண்டும், ஒருவனை யொருவன் திட்டிக் கொண்டும் முன்னேறிக் கொண்டிருந்தனர். பியூன்கள் வேலையிலேயே கவனம் செலுத்தாமல் ஒரு மூலையில் நின்று வம்பளந்து கொண்டிருந்தனர். ஆபீஸ் வேலை ஒருவித ஒழுங்கு முறையின்றி ஏதோ 'காமா, சோமா' வென்று ஓடிக்கொண்டிருந்தது. இதைக் கண்ணுற்ற ரமாநாத்துக்கு, 'இதுவும் ஒரு ஆபீஸா?' என்று தோன்றிற்று. 'நானும் இந்தப் பழைய கிழிந்த ஜமக்காளத்தில் உட்கார்ந்துதான் ஆபீஸ் நடத்த வேண்டும்' என்ற எண்ணம் எழுந்ததும், அவனுக்கு அந்தத் தொழிலே மிகவும் இழிவாகப் பட்டது. உடனே ஹெட் ரமேஷ் பாபுவிடம் போய், "நானும் அந்த அழுக்கேறிய ஜமக்காளத்தில்தான் உட்கார வேண்டுமா, என்ன? அதெல்லாம் என்னால் முடியாது. ஒரு நல்ல மேஜையும் நாலைந்து நாற்காலிகளும் அனுப்பி வையுங்கள். இன்னும் ஒரு விஷயம். என்னிடத்தில் ஒவ்வொரு ஆளாகத்தான் அனுப்ப வேண்டும் என்று பியூன்களுக்கு உத்தரவிடுங்கள்!" என்று சொன்னான்.

ரமேஷ்பாபு, புன்முறுவலுடன் மேஜையும் நாற்காலிகளும் அனுப்பி வைத்தார். ரமா தன்னிடத்திற்குச் சென்று வெகு மிடுக்காக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். கிழட்டுச் சாயபு அவனுடைய மிடுக்கைக் கண்டு உள்ளூறச் சிரித்துக் கொண்டார். 'வேலைக்கு வந்த புதிதோ, இல்லையோ? இரண்டு நாளைக்கு இப்படித்தான் இருக்கும். நாலு நாள் போனால் தானாக இந்த மிடுக்கெல்லாம் அடங்கி விடும்' என்று எண்ணியவாறு, ரமாவிடம் 'சார்ஜ்' கொடுத்தார். 'இது என்ன பிரமாதமான வேலை! ஏதோ அன்றாடம் வரும் வரும்படிக்குக் கணக்கு எழுத வேண்டியதுதானே! இன்ன சாமானுக்கு இன்ன விகிதப்படிச் 'சுங்கம்' வாங்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்குத்தான் அச்சடித்த தாளே இருக்கிறதே!' என்று எண்ணிக் கொண்டான் ரமா. என்ன இருந்தாலும் சாயபுவுக்குத் தான் முப்பது வருஷ காலமாகப் பார்த்துவரும் வேலையை விட்டு விலகும்பொழுது மனதை என்னவோ



"நான் என் மனைவியிடம் எதையும் ஒளிக்கமாட்டேன்; எல்லாவற்றையும் சொல்லிவிடுவேன்."

"ஒரு நாளாவது நீ அவளிடம் பொய்யே சொன்னதில்லையா?"

"அது தான் சொன்னேனே! எதையும் அவளிடம் சொல்லிவிடுவேன் என்று!"



செய்தது. பணம் — பெயர் இரண்டும் கிடைத்த ஓர் இடத்தை விட்டு விலகும் பொழுது யாருக்குத்தான் மன வருத்தம் ஏற்படாது!

சாயபு, 'சார்ஜை'க் கொடுத்து விட்டு வீட்டுக்குப் புறப்பட்டார். ரமாநாதனும் அவர் பின்னாலேயே சென்றான். சாயபு அவனுடைய விநயசுபாவத்தைக் கண்டு உள்ளூற மகிழ்ச்சியுற்றார். உதடுகளில் புன்முறுவல் தாண்டவமாட, "பில் ஒன்றுக்கு ஓர் அணா வீதம் கிடைக்கும். நாம் வாய் திறந்து கேட்க வேண்டியதே யில்லை. ஜனங்கள் தானாகவே கொடுத்து விடுவார்கள். நீங்களோ பணக்காரர்; இருந்தாலும் இவ்வளவு நாளாக இருந்தவரும் வழக்கத்தை மாற்றி விடாதீர்கள். இப்பொழுது மாற்றி விட்டால் அப்புறம் திரும்பப் புதுப்பிப்பது ரொம்பவும் கஷ்டமாகி விடும். இந்த ஓர் அணாவில் பாதி பியூன்களுக்குப் போய் விடும். முன்னால் இருந்த ஹெட் கிளார்க்கு மாதம் இருபத்தைந்து ரூபாய் வாங்கிக் கொண்டிருந்தார். ஆனால் இப்பொழுது இருப்பவர் ஒரு தம்பிடி கூட வாங்கிக்கொள்ளுவதில்லை" என்று சொன்னார்.

ரமா பேச்சில் ஒருவித அருவருப்பை வரவழைத்துக் கொண்டு, "ரொம்பத் தொல்லை பிடித்த வேலையாக இருக்கும் போலிருக்கிறதே! இதை ஒரு ஒழுங்குக்குக் கொண்டு வந்தால்தான் கஷ்டம் இல்லாமல் இருக்கும்!" என்றான்.

"முதலில் அப்படித்தான் தோன்றும். ஆனால் போகப் போகத் தெரியும். இது ரொம்ப சுகமான வேலை!' என்று சாயபு சிரித்துக் கொண்டே சொன்னார்.

ரமா, சாயபுவை அனுப்பி விட்டுத் தன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். பக்கத்தில் இருந்த ஒரு பியூனைக் கூப்பிட்டு, "எல்லோரையும் வராந்தாவுக்குக்

யிலே போய் நிற்கச் சொல்லு. ஒரு காகிதத்தில் வரிசையாகப் பெயரை எழுதிக் கொண்டு ஒவ்வொருவராக என்னிடம் அனுப்பி வை!" என்றான்.

"இந்த ஏற்பாடுதான் சரி! கூட்டம் போட்டால் வேலை சீக்கிரமாக ஆகாது!" என்று எல்லோரும் ஒத்துக் கொண்டனர்.

ரமாவினுடைய இந்த ஒரு உத்தரவே அவனுக்குப் பெருமையைச் சம்பாதித்துக் கொடுத்து விட்டது. அவன் வேலைக்குப் போன இரண்டு மூன்று தினங்களுக்குள்ளேயே, அந்த வேலையில் உள்ள சகல 'ஒளிவு — சுளுவு' களையும் தெரிந்து கொண்டு விட்டான். அது மட்டும் அல்ல. பணம் பறிக்கும் கலையில் முன்னாலிருந்த சாயபுகூட அவனிடம் பிச்சைதான் வாங்க வேண்டும்; அவ்வளவு தேர்ந்து விட்டான். கறுப்பு மார்க்கெட்டில் கொள்ளை லாபம் அடிக்கும் பெரிய பெரிய வியாபாரிகளிடமும் 'பில்' ஒன்றுக்கு நாலு வாங்கிக் கொண்டு, அதில் பாதியைப் பியூன்களுக்குப் பங்கு போட்டுக் கொடுப்பதென்றால், அது அவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. 'இடம், பொருள், ஏவல் இவைகளுக் கேற்றவாறு எப்படி யெல்லாம் பணம் பறிக்கலாம்' என்று மனத்துள் திட்டமிட்டுக் கொண்டான். அதற் கேற்றாற்போல, ஹெட் கிளார்க்கோ அவனுக்கு மிகவும் வேண்டியவர். 'வேண்டாம்' என்று எதற்காகத் தடுக்கப்போகிறார்? அவனுடைய கெட்டிக் காரத்தனத்தைக் கண்டு மகிழ்ச்சியுற்று, அவரே அவனைத் தட்டிக் கொடுத்து, "கெட்டிக்காரத்தனமாக வேண்டிய மட்டும் பணம் சம்பாதித்துக் கொள். ஆனால் சட்ட திட்டங்களுக்குப் புறம்பாகப் போய் மாட்டிக் கொண்டு விடாதே!" என்று உற்சாகம் வேறு ஊட்டினார்.

நாளுக்கு நாள் அவனுடைய வரும்படி அதிகரித்தது. வரும்படியோடு கூடவே பெயரும் புகழும் ஓங்கி வந்தன. அவனுடைய சகாக்களான ஆபீஸ் குமாஸ்தாக்கள் காப்பி, வெற்றிலைப் பாக்கு, சிகரெட் பொடி முதலிய சில்லறைத் தேவைகளுக்கு அவனுடைய கையைத்தான் எதிர்பார்ப்பார்கள். அவனும் சளையாது அந்தச் செலவுகளைத் தானே ஏற்றுக் கொள்ளுவான். மேல் வரும்படி வரும்பொழுது இந்தச் சில்லறைச் செலவுகளுக் கெல்லாம் கணக்குப் பார்த்தால் கட்டி வருமா? "என்ன தாராளம், போங்கள்! பணத்தை அவன் பணமாகவா மதிக்கிறான்? ஓட்டாஞ் சல்லி போல் அல்லவா வாரி இறைக்கிறான்!" என்று ஆபீஸ் முழுவதும் அவனைப் பற்றிய பேச்சாகவே யிருந்தது.

ஆபீஸ் பியூன்களைப் பற்றிக் கேட்பானேன்! அவன் ஏவும் வேலைகளைச் செய்ய நாலாறு தாஸர்களாய் அவர்கள் காத்திருந்தனர். ஏனெனில், அவன் வந்த பிறகு, அவர்களுக்கு வரும்படி மட்டும் அல்ல; செல்வாக்கும் ஓரளவு அதிகரித்திருந்தது. ஒரு காலத்தில் வண்டிக் காரர்களிடம் கூட வசை மொழிகள் வாங்கிய அதே பியூன்கள், இப்பொழுது என்னவென்றால் பெரிய பெரிய மனிதர்களைக் கூட வாசலில் மணிக்கணக்காக நிறுத்தி வைக்கும் அதிகாரத்தைப் பெற்று விட்டனர்! இதற்கெல்லாம் காரணம் ரமாநாத்தினுடைய பிரதாபம்தான்.

ஆனால் இவ்வளவு இருந்தும் இதுவரை பத்மாவின் ஆசைகளில் ஒன்று கூடப் பூர்த்தி யடையவில்லை. நாகபஞ்சமி யன்று தெருப் பெண்கள் அவளை அரசமரப் பிரதக்ஷணத்துக்கு அழைத்துப் போக வந்தனர். ஆனால் அவள் தன் அறையை விட்டு வெளியிலேயே வரவில்லை. அதற்குப் பிறகு, புரட்டாசியில் கோகுலாஷ்டமி வந்தது. சில வீடுகளில் தடபுடலாக உற்சவம் நடப்பது வழக்கம். அந்த வழக்கத்தை யொட்டிப் பக்கத்து வீட்டில் வெகு விமரிசையாகக் கோகுலாஷ்டமி உற்சவம் நடைபெற்றது. மாமியாரையும், மாட்டுப் பெண்ணையும் அவர்கள் வருந்தி வருந்தி அழைத்தனர். ஜாகேசுவரி போனாள்; பத்மா 'வர முடியாது' என்று தீர்மானமாக மறுதளித்து விட்டாள்.

மூன்று மாதங்கள் ஓடிவிட்டன. அவள் ரமாநாத்திடம் வாய் திறந்து ஒரு தடவை கூட நகைப் பேச்சையே எடுத்ததில்லை. இருந்தாலும் தனிமையில் இருக்கும் பொழுது அவளது மனத்தில் அந்த நினைவு எழத்தான் செய்தது. ரமாநாத் ஒரு தடவை எங்கிருந்தோ ஒரு நகைக் 'கேட்லாக்' கைக் கொண்டு வந்திருந்தான். அதில் விதவிதமான அழகிய நகைகளின் படங்கள் இருந்தன. கீழ விலையும் குறிப்பிடப்பட்டிருந்தது. பத்மா தனியாக இருக்கும் பொழுதெல்லாம் அந்தக் 'கேட்லாக்' கை எடுத்து வைத்துக்கொண்டு நகைப் படங்களைப் பார்க்க ஆரம்பித்து விடுவாள். ஆனால் ரமாவைப் பார்த்ததும், 'சடக்'கென அதை எங்கேயாவது ஒளித்து வைத்து விடுவாள். ஏனென்றால், அவன் தன் உள்ளத்து

ஆசைகளை வெளியே காட்டி, எச்சக்கு இடம் வைத்துக் கொள்ள விரும்பவில்லை.

அன்று ரமா நள்ளிரவுக்குப் பிறகு வீடு திரும்பினான். பத்மா தனியாகக் கட்டிலில் படுத்திருப்பதைக் கண்ட அவன் சிரித்தவாறே, "பக்கத்து வீட்டில் நல்ல பாட்டுக் கச்சேரி நடக்கிறதே! நீ போகவில்லையா, என்ன?" என்று கேட்டான்.

பத்மா முகத்தைத் திருப்பிக் கொண்டாள்; வாய் திறந்து பதில் சொல்லவேயில்லை.

"ஆமாம், உனக்கு இங்கே தனியாக இருக்கப் பயமாயில்லையா?" என்று மறுபடியும் ரமாநாத் கேட்டான்.

"இந்த வீட்டில் வாழ்க்கைப் பட்ட பிறகு பயந்தால் முடியுமா? நல்ல வேளையாக அவர்கள் வீட்டுக்குப் போகாமல் இருந்தேனோ, பிழைத்தேனோ! நகை நட்டு ஒன்றுமே போட்டுக் கொள்ளாமல் ஒருவர் வீட்டுக்கு எப்படிப் போவது? போயிருந்தால் நம் மானம் அல்லவா கப்பலேறியிருக்கும்!" என்று சற்றுச் சூடாகவே பத்மா பதில் அளித்தாள்.

அவளுக்கு இப்படி ஏசிப் பேச வேண்டும் என்ற எண்ணமே எழவில்லை. ஆனால் ரமாவின் வார்த்தைகளும், வீட்டிலிருந்தவர்கள் அனைவரும் அவளைத் தன்னந் தனியாக விட்டுவிட்டு உற்சவம் பார்க்கப் போய் விட்டதும் அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அதனால்தான் அவளுக்கு அவ்வளவு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவர்களுக்கு 'மனது' என்று ஒன்று இருந்தால் இப்படி அவளை மட்டும் தனியாக வீட்டில் விட்டு விட்டுப் போகத் துணிந்திருப்பார்களா?

ரமா சிறிது சங்கோசமுற்று, "நம் மானம் கப்பல் ஏறுவானேன்? ஊர் பூராவுக்கும்தான் நம் வீட்டில் திருட்டுப்போன விஷயம் தெரியுமே! அப்படியிருக்கும் பொழுது — அதுவும் இந்தக் கிராக்கி காலத்தில்—மூவாயிரம், நாலாயிரத்துக்கு நகைகள் செய்து போடுவது சின்னக்கிளையில்லை என்பது ஊராருக்குத் தெரியாத விஷயமா?" என்றான்.

'திருட்டு' என்ற வார்த்தையைச் சொல்லும்பொழுதே ரமாவின் இதயம் துணுக்குற்றது. அதற்கேற்றாற் போல் பத்மா வேறு அவனை ஒரு தடவை கூர்ந்து கவனித்து விட்டாள். அதைக் கண்ணுற்ற அவனுக்கு மனம் 'பகீர்' என்றது. அவன் பார்த்த அந்தப் பார்வை, அவளுக்குத்




"என்ன, அண்ணே! இன்னிக்குக் குழாயிலே தண்ணியே வரலையே!"

"அதுதானே அண்ணே, நானும் முழிச்சுக்கிட்டு இருக்கேன்; இன்னிக்கு அசல் பாலை இல்லே ஊத்தி அழுதும் போலேயிருக்குது!" —எ. ஏழுமலை.

திருட்டு விஷயம் பூராவும் தெரியும். சங்கோசத்தினால் சொல்லாமல் இருக்கிறாள்' என்ற பிரமையை வேறு உண்டு பண்ணி விட்டது. போதும் போதாததற்கு, மேலே பேசினால் வார்த்தை வளர்ந்து 'குட்டு' பூராவும் வெளிப்பட்டு விடுமோ என்ற பயமும் கூடக் கலந்து கொண்டது. இத்துடன் அவன் கண்டதாகச் சொன்ன கனவும் நினைவுக்கு வரவே, அவளது பார்வை அவனுடைய உள்ளத்தை அரம் கொண்டு அறுக்க ஆரம்பித்து விட்டது. 'அப்படியிருக்காது. நாம் நினைப்பதுதான் வீண் பிரமை! அப்படியெல்லாமிருந்தால் இவள் ஏன் இப்படி வாய் திறந்து பேசாமலேயே இருக்கிறாள்!' என்றெல்லாம் எண்ணி மனதைப் போட்டு உழற்றிக் கொள்ள ஆரம்பித்தான்.

பிறகு தன் மனதிலுள்ள சந்தேகத்தைப் போக்கிக் கொள்ளுவதற்காகவும், பத்மாவின் மனதைத் தெரிந்து கொள்ளுவதற்காகவும் ரமா அவளைப் பார்த்து, "வந்ததும் வாராததுமாக உனக்கு இந்தக் கஷ்டம் வரும் என்று யாருக்காவது தெரிந்திருந்தால்தானே!" என்று அங்கலாய்ப்புடன் சொன்னான்.

பத்மாவின் கண்களில் நீர் சுரந்து விட்டது. "என் தலையெழுத்து அப்படியிருக்கும்பொழுது அதை யாரால் அழிக்க முடியும்? எவ்வளவோ பெண்கள், நகை நட்டுப் போட்டுக் கொள்ளாமலேயே தங்கள் காலத்தைக் கழிக்க வில்லையா? அது மாதிரி நானும் இருந்துவிட்டுப் போகிறேன்!" என்றாள். (தொடரும்)


டயர்களுக்குள் பீமன் போல்
விளங்குவது
டன்லப்
ஜயண்ட்கள்
எவ்வளவு பாரத்துக்கும், எவ்வித
ரஸ்தாக்களுக்கும் ஏற்றவை
TRADE MARK



ரகுவின் மனோரதம்

மூர்த்தி

அடுத்த வீட்டிலிருந்து குழந்தை அழும் சத்தம் கேட்டது. உடனே பக்கத்து வீட்டிலிருந்த ஒருத்தி அவசர அவசரமாக வெளியே வந்தாள். தெருவில் நான்கு வயதுக் குழந்தை ஒன்று, அண்டை வீட்டுக் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தது. அவள் அவனை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு, அடுத்த வீட்டுக்குள் நுழைந்தாள். அங்கே பதினெட்டு வயதுள்ள பெண்ணின் பக்கத்தில் கிடந்த ஒரு சிறு குழந்தை அழுதுகொண்டிருந்தது.

"கமலா! ராத்திரி உனக்கு ஜுரமாமே! எனக்கு ஒன்றும் தெரியாதம்மா!" என்றாள் வந்தவள்.

"இல்லை, மன்னி! இலேசான ஜுரமென்று பேசாமல் இருந்தேன்!" என்றாள் கமலா.

"நன்றாயிருந்தாய், பேசாமல்!" என்று சொல்லி விட்டு, இடுப்பிலிருந்த தன் குழந்தையிடம், "பாப்பாவைப் பார்த்தாயா?" என்றாள் தாயார். குழந்தை ரகு தலையை ஆட்டினான்.

"தங்கச்சி சூடாமணி!" என்றாள் கமலா.

ரகு வைத்த கண் வாங்காமல் அந்தக் குழந்தையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பிறகு ரகுவை எடுத்துக் கொண்டு தாயார் போய் விட்டாள். மறுபடியும் குழந்தை ரகு அவன் சிநேகிதர்களுடன் விளையாடப் போனான். விளையாட்டில் அவன் மனது செல்லவில்லை. தாயாருடன் காலையில் பார்த்த குழந்தையின் முகம் அவன் மனதை விட்டு அகலவில்லை.

"பாப்பா, அங்கச்சி!" என்றான் அடிக்கடி தாயாரிடம் ஓடி வந்து.

"இதற்குள்ளேயே இப்படிப் பறக்கிறாயே, நாளைக்கு அவளும் நீயும் பெரியவர்களானால்!" என்றாள் தாயார் மகிழ்ச்சியுடன். பிறகு தன் மனதிற்குள் பிரம்மதேவன் போடும் முடியைப் பற்றி நினைத்துக் கொண்டாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, தாயார் பூஜை செய்யும்போது, ரகு மெதுவாய்ப் பக்கத்து வீட்டுக்குள் நுழைந்து விட்டான். வழியில் நின்று கொண்டிருந்த கமலாவின் புருஷன் ராமு, "ரகு, இங்கே வாடா!" என்றான்.

அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் ரகு உள்ளே ஓடி விட்டான். கமலா அவனைப் புன்னகையுடன் வரவேற்றாள்.

"வாடா, அப்பா! பாப்பாவைப் பார்க்க வந்தாயா?" என்றாள்.

ரகு தலையை அழகாக அசைத்தான். பிறகு கமலா பெருமூச்சு விட்டாள். அவள் மனதில் பல எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாக எழுந்தன. குழந்தை சூடா பதினாறு வயது கன்னிகையாக மாறி, ரகு வாலிபனாகி, கல்யாணம், நலங்கு, ஊஞ்சல் — அதன் பிறகு காதல் வாழ்க்கை நடத்தும் வரை கமலாவின் எண்ணங்கள் கங்கு கரையின்றி ஓடின.

ரகு பயமில்லாமல் குழந்தையைத் தொடப் போனான். தூங்கிக் கொண்டிருந்த

குழந்தை சிரித்தது. ரகு இரண்டு கையையும் கொட்டி, "வா, பாப்பா!" என்று ஆர்ப்பரித்தான்.

"ஆமாம், பாப்பா சிரிக்கிறது! நீ அவன் ஆம்படையாளோ இல்லையோ? உன்னைப் பார்த்து அவன் சிரிக்கிறான்!" என்றாள் கமலா.

இந்த வார்த்தைகளின் அர்த்தம் குழந்தைக்குத் தெரியுமா, தெரியாதா என்பதைப் பற்றி அவளுக்குக் கவலையில்லை. ஏதோ தன் அந்தரங்க எண்ணத்தை அவனிடம் சொல்லி விட்டதாக நினைத்தாள்.

கமலாவுக்கு ஜுரம் வர வர அதிகமாகிக் கொண்டு வந்தது. அன்று ராமு, அவளையும் குழந்தை குடாவையும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். "உன்னை விட்டுவிட்டு உன் தாயார் போகப் போகிறாளே!" என்ற வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வெளிவரா விட்டாலும் முகம் அந்த வார்த்தைகளில் தொனிக்கக் கூடிய ஏக்கத்தை எடுத்துக் காட்டியது. "குழந்தையின் வாழ்க்கையைப் பற்றி என்ன வெல்லாமோ எண்ணினோமே, கடைசியில் நம் வாழ்க்கையே இப்போது முடியப் போகிறதே!" என்று எண்ணி வெறுப்புடன் சிரித்தாள் கமலா.

"என்ன, கமலா! ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டான் ராமு.

"ஒன்றுமில்லை; மன்னியைக் கூப்பிடுங்கள்!" என்றாள்.

ராமு மன்னியைக் கூப்பிடப் போனான். அடுத்த நிமிஷமே அவள் ஓடி வந்தாள்.

"கமலா, உனக்கு என்ன வந்து விட்டது? நாங்களெல்லாம் நோய்வாய்ப்பட்டுப் பிழைக்கவில்லையா?"

கமலா கண்ணீர் உகுத்தாள். பிறகு, "மன்னி! என் குடாவைக் கை விடாதீர்கள்! அவள் அனாதைக் குழந்தையாகி விட்டாள்!" என்று சொல்லித் தேம்பித் தேம்பி அழுதாள். அந்த விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையே, "அவளை ரகுவுக்குக் கல்யாணம் செய்து வைக்கிறீர்களா?" என்று கேட்டுவிட்டு, மன்னியின் முகத்தை ஆவலுடன் பார்த்தாள்.

"அதற்கென்னடி, அம்மா! அப்படியே ஆகட்டும். உனக்கு ஒன்றும் வராது. வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதே!"

அவ்வளவுதான்; கமலாவின் கண்கள் தாமாகவே மூடிக்கொண்டன. அவள் இதயம் சாந்தி அடைந்ததற்கு அறிகுறியாக ஒரு பெரு மூச்சு வெளிப்பட்டுக் காற்றோடு கலந்தது.

2

காலசக்கரம் சுழன்று கொண்டேயிருந்தது. ரகு பத்து வயதுப் பையனாகி விட்டான். குடா ஏழு வயது நிறைந்த சிறுமியானாள். ரகுவின் மனத்திலிருக்கும் அன்பு சில சமயம் கோபமாக மாறுவதுண்டு. அப்போது அவன் குடாவைக் கை வலிக்கிற வரை அடித்து விடுவான். அவள் அழும்போது அவன் மனம் இரங்கி விடும். "குடா, நீ சமத்தோல்லியோ? நான் சொன்ன பேச்சை நீ ஏன் கேட்க மாட்டேனென்கிறாய்? அதுதான் எனக்குக் கோபம் வந்து விடுகிறது!" என்று சொல்லித் தேற்றுவான்.

"போ, போ! நான் உன்னோடு பேசவில்லை. நீயும் என்னோடு பேச வேண்டாம்!" என்று அவள் அழ ஆரம்பித்து விடுவாள்.

"உனக்குப் பட்சணம் வேண்டாமாம!" என்று ஆட்டம் காட்டுவான் ரகு.

"எனக்குடா! நான் இனிமேல் அழாமலிருக்கேன். ஹூம்!...நீ வேணுமானால் பாரேன். இப்ப அடியேன், என்னை!" என்பாள் குடா. மீண்டும் இருவரும் கை கோத்துக் கொண்டு விளையாட ஆரம்பித்து விடுவார்கள்.

குடா, ரகுவிடம் உயிரையே வைத்திருந்தாள்; ரகுவும் அப்படித்தான்.

இப்போது ரகு பெரியவனாகி பி. ஏ. படித்து விட்டான். குடாவிடமும் வயதுக்கேற்ற குணங்கள் தோன்ற ஆரம்பித்தன. ஆனாலும் சிறு வயதிலிருந்த விளையாட்டுப் புத்தி அவர்களை விட்டு அடியோடு போய் விடவில்லை.

ஒரு நாள் குடா கையில் புத்தகத்துடன் தோட்டத்தில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தாள். அப்போது அங்கே வந்த ரகு, "குடா, இங்கேயா இருக்கிறாய்?" என்றான்.

"ஏன், என்னைத் தேடினாயா?" என்று கேட்டாள் குடா.

"தேடுவானேன்? நீ இருக்கும் இடம் தான் எனக்குத் தெரியுமே!"

"ஆமாம், பேசாமல் இரு!" என்றாள் குடா.

ரகு அவளுக்கு எதிர்ப்புறத்தில் உட்கார்ந்து, "ஊரில் எல்லோரும் பேசிக்

சொல்கிறார்களே, உனக்கு ஒன்றும் தெரியாதா?" என்றான்.

"என்ன அது?"

"உனக்கும் எனக்கும் கல்யாணம் பண்ண வேண்டுமாம்!"

ருடா கலகல வென்று சிரித்தாள்.

"என்ன யோசனை, பார்! குழந்தையிலிருந்து ஒன்றாய் வளர்ந்தால் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்கிற அர்த்தம் போலிருக்கிறது!" என்றான் ரகு.

"அண்ணன், தங்கை மாதிரி இருந்துவிட்டு, இப்போது கல்யாணம் செய்து கொள்வதென்பது எனக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை!" என்றாள் ருடா.

"அதோடு கேட்டாயா, விஷயத்தை? மன்னியிடம் கமலா அத்தை வாக்கு வாங்கிக் கொண்டாளாம்!"

"நம்மைக் கேட்டுத்தான் வாங்கினார்களா? அம்மா வார்த்தையாயிருந்தாலும், பிடிக்காத காரியத்தை நான் ஒரு நாளும் ஒத்துக் கொள்ளமாட்டேன். நீ எனக்கு அண்ணாதான்!" என்றாள் ருடா.

"உனக்குப் பேஷான புருஷனை நான் தேடுகிறேன்!" என்றான் ரகு.

அன்று இரவு மன்னி, "அம்மா சொன்ன வார்த்தையடி! ரகுவுக்கென்ன, ராஜா மாதிரி இருக்கிறான். அவனைப் பார்த்தாலே பசியாறிப் போய்விடுமே!" என்றாள்.

"ரகு அண்ணாவைக் கேட்டாயா, மன்னி! நீ கேட்டுத்தான் பாரேன். 'வள்வள்' என்று விழுவான். எனக்கும் அவனுக்கும் இஷ்டமில்லை!" என்றாள் ருடா.

"நன்றாயிருக்கிறது, நீங்கள் சொல்வது!" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள் மன்னி.

அதே வருஷத்தில் நல்ல பணக்காரப் பிள்ளையான சங்கரனுக்கு ருடாவைக் கல்யாணம் பண்ணி வைத்தார்கள். பூங்குடி கிராமம் அதிசயத்தில் மூழ்கியது. ரகுவோ தன் கடமையைச் செய்து விட்டதாக எண்ணிச் சந்தோஷப் பட்டான்.

3

சங்கரன் தலை தீபாவளிக்கு வந்தான். அவனுடன் ருடாவும் வந்திருந்தாள். வீட்டில் உபசாரம் பலமாயிருந்தது. ஒரே சந்தோஷத்தில் மூழ்கியிருந்தாள் ருடா. ரகு அவளை அடிக்கொரு தரம் கேலி செய்து கொண்டிருந்தான்.

காப்பியை எடுத்துக்கொண்டு ருடா மாடிக்குப் போனாள். அங்கே சங்கரன் உட்கார்ந்து கொண்டிருந்தான். ருடா காப்பியை மேஜைமேல் வைத்துவிட்டுத் தயங்கி நின்றாள்.

"நீ என்னிடம் பேசவேயில்லையே! ஏன் என்னைக் கண்டதும் ஒளிந்து கொள்ளுகிறாய்?" என்று கேட்டான் சங்கரன்.



சூடா மௌனமாக நின்று கொண்டிருந்தாள்.

"நாற்காலியில் உட்காரேன்!" என்று சங்கரன் கையைப் பிடித்து இழுத்து அவளை உட்கார வைத்தான்.

பிறகு, "சூடா! நான் ஒன்று கேட்கிறேன். உனக்கு ரகு நிஜ அண்ணாவா, அல்லது வேறு ஏதாவது உறவா?" என்றான்.

"நிஜ அண்ணா இல்லை; எனக்கு அவன் அண்ணாமாதிரி இருக்கிறான். அவன் என் மாமாவின் பிள்ளை!" என்றாள் சூடா.

"உன்னிடம் எனக்குப் பிரியமில்லை என்று நினைத்துக் கொள்ளாதே! நீ அவனோடு அவ்வளவு தாராளமாகப் பழகுவது எனக்குப் பிடிக்கவில்லை!"

சூடாமணி ஆச்சரியத்தோடு சங்கரனைப் பார்த்தாள்.

"கோபித்துக் கொள்ளாதே, கண்மணி! நான் சொன்னது உனக்குக் கோபமா?"

"எனக்குக் கோபமே வராது!" என்றாள் சூடா.

இந்தச் சமயத்தில் ரகு மாடிக்கு வந்தான். அவனைக் கண்டதும் சூடா கீழே இறங்கிப் போய்விட்டாள். அன்றைய தினத்திலிருந்து சூடா ரகுவிடம் கலகலப்பாக இருப்பதில்லை. சில தினங்களுக்கெல்லாம் சூடா, சங்கரன் இருவரும் ஊருக்குப் பயணமானார்கள். போகும் போது, "ரகு! இனிமேல் நீ எனக்குக் கடிதம் ஏதாவது எழுதப் போகிறாய்! வேண்டாம்!" என்றாள் சூடா.

"ஏன்?" என்று கேட்டான் ரகு.

"அவர் ஒரு மாதிரி! நீ எழுதவேண்டாம்" என்றாள்.

ரகுவின் கண்களில் நீர் துளித்தது.

• • •

பக்கத்தில் சூடா சந்தோஷமாகவேயிருந்தாள். தான் சந்தோஷமாக இருப்பதைப் பற்றி ரகுவின் ஊருக்குப் போகிறவர்களிடமெல்லாம் அவள் சொல்லியனுப்புவாள். சூடாவைப் பிரிந்ததிலிருந்து ரகுவுக்கு ஒரே ஏக்கமாக இருந்தது. இருந்தாலும் மன்னியின் வேண்டுகோளின்படி உமா என்னும் கன்னிகையை மணம் புரிந்து கொண்டான்.

ரகுவின் கல்யாணத்தின்போது சூடா வந்திருந்தாள். சூடாவிடம் ரகு கேலி பண்ணுவதும், பேசுவதும் உமாவுக்குப் பிடிக்கவில்லை. ரகு சூடாவைப் புகழ்ந்தால் உமாவுக்கு ஒரே எரிச்சலாயிருக்கும். இதற்கிடையே இவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்குப் பாஸ்கரன் என்று நாமகரணம் சூட்டினார்கள்.

நாளடைவில் சூடாவும் ஒரு பெண் குழந்தைக்குத் தாயானாள். அதற்குப் பாலா என்று பெயர் வைத்துத் தம்பதிகள் இருவரும் மகிழ்ந்தார்கள்.

சூடாவும், ரகுவும் எவ்வளவு சந்தோஷமாக இருந்தார்களோ, அதற்கு நேர்மாறாக இருந்தது ரகுவின் வாழ்க்கை. சில சமயம் ரகு, "'சூடாவைக் கல்யாணம் செய்து கொள்!' என்று மன்னி சொன்ன மாதிரி செய்திருந்தால், என் கண்மணி சூடா என் பொருளாகவே இருந்திருப்பாள் அல்லவா?" என்று எண்ணுவான்.

"பெண்களே இப்படித்தான்! புதிய சந்தோஷத்தில் பழைய சிநேகத்தை மறந்து விடுகிறார்கள்!" என்று எண்ணி, சில சமயம் அவன் சூடாவின் மேல் வெறுப்படைவதும் உண்டு.

உமா அவனை எவ்வளவோ சந்தோஷப்படுத்த முயன்றாள். ஆனாலும் அவன் எப்பொழுதும் சூடாவின் நினைவாகவே யிருந்தான். அதே ஏக்கத்தில் ரகு நாளுக்கு நாள் உருக்குலைந்து போய்ச் சீக்கிரத்திலேயே படுத்த படுக்கையாகி விட்டான்.

ஒரு நாள், "உமா! எனக்காக நீ ஒரு காரியம் அவசியம் செய்ய வேண்டும், முடியுமா......?" என்று இழுத்தான் ரகு.

"செய்கிறேன், சொல்லுங்கள்!" என்றாள் உமா.

"சூடாவுக்குக் கடிதம் எழுதி, அவளை உடனே இங்கு வரச் செய்ய வேண்டும்" என்றான் ரகு.

"அப்படியே ஆகட்டும்" என்றாள் உமா.

அவன் கேட்டுக் கொண்டபடி உமா, சூடாவுக்குக் கடிதம் எழுதினாள். சூடாவும் சங்கரனும், குழந்தை பாலாவுடன் வந்து சேர்ந்தார்கள்.

"ரகு, என்னை மன்னிப்பாயா?" என்று கதறினாள் சூடா.

"சூடா! நடந்ததை நினைத்து வருந்துவதில் பிரயோசனமில்லை. என்னை அழைத்துக்கொண்டு போவதற்கு எமன் வந்து வாயிலில் நிற்கிறான். இந்தச் சமயத்தில் நான் உன்னைக் கேட்டுக் கொள்வது இதுதான்: என் குழந்தை பாஸ்கரனை உன் குழந்தை

யைப் போலவே நீ வளர்க்க வேண்டும். நாம் இருவரும் எப்படி இருக்கிறோமோ, அப்படியே அவர்களும் இருக்க வேண்டும். அந்தையின் வாக்கை நம் குழந்தைகளின் விஷயத்திலாவது நிறைவேற்றி வைக்க வேண்டும். இதுதான் என் கடைசி மனோரதம். இதை நிறைவேற்றி வைப்பாயா?'' என்றான் ஈரு.

"ஆகட்டும்!'' என்றாள் ருடா. மனச் சாந்தியுடன் கண்ணை மூடினான் ஈரு.

4

ஓர் இரவு. ருடாவும் சங்கரனும் நிலா முற்றத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

"ஈருவைத்தான் உங்களுக்குப் பிடிக்காமற் போய்விட்டது. அவனுடைய குழந்தை பாஸ்கரனையாவது அழைத்துக் கொண்டு வர மாட்டீர்களா?'' என்றாள் ருடா.

அவள் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

"சரி, ருடா! நீ கவலைப்படாதே!'' என்றான் சங்கரன்.

சில தினங்களுக்குப் பின் சங்கரன் ஈருவின் குழந்தையை அழைத்துக்கொண்டு வந்தான். ருடா அவனைத் தன் குழந்தையைப் போலவே வளர்த்து வந்தாள்.

ஒருநாள் பாஸ்கரனும், பாலாவும் வாசலில் விளையாடிக் கொண்டிருந்தனர். அதைப் பார்த்த ருடாவுக்கு அந்த நாளில் தானும் ஈருவும் தெருவில் விளையாடியது ஞாபகம் வந்தது. அதே சமயத்தில் அங்கு வந்து நின்ற சங்கரன், "என்ன, யோசனை பலமாயிருக்கிறதே?'' என்றான்.

"ஒன்றுமில்லை; ஈருவின் மனோரதத்தை நிறைவேற்றினேமே, அதை நினைத்துக் கொண்டேன்!'' என்றாள் ருடா.

"எங்கே நிறைவேற்றினோம்? அவர்கள் இருவருக்கும் கல்யாணம் செய்து வைத்த பிறகு அல்லவா ஈருவின் மனோரதம் பரிபூரணமாக நிறைவேறும்?'' என்றான் சங்கரன்.

"அந்த விஷயத்தில் நம் இருவர் மனமும் ஒன்றுபட்டு விட்ட பிறகு, இனி எனக்கு அதைப் பற்றிக் கவலையே யில்லை!'' என்றாள் ருடா.

இந்தச் சமயத்தில் குழந்தைகளிருவரும் வந்து அவர்களுடைய கால்களைக் கட்டிக் கொண்டனர். இருவரையும் ஆளுக்கு ஒருவராக அன்புடன் வாரி அணைத்துக் கொண்டு உள்ளே சென்றார்கள்.



"மிஸ்டர் பஞ்சாட்சரம் நேற்றிரவு காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்ற செய்தியைப் பத்திரிகையில் பார்த்ததும், மிஸ்டர் பஞ்சாட்சரம் அந்தப் பத்திரிகை ஆபீஸுக்குச் சென்று தாம் காலமானதாக வந்த செய்தி தவறு என்று ஒரு திருத்தம் பிரசுரிக்கச் சொன்னார். மேற்படி பத்திரிகை மறுநாள் கீழே கண்டபடி ஒரு திருத்தம் பிரசுரித்திருந்தது:—

"நேற்றைய இதழில் மிஸ்டர் பஞ்சாட்சரம் காலமானார் என்று தவறுதலாகப் பிரசுரித்து விட்டோம். அவர் இன்னும் காலமாகவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.''

★

"நான் டாக்டரிடம் என்னுடைய ஞாபக மறதியைப் பற்றிச் சொல்லி, அதற்கு ஏதாவது மருந்து கொடுக்கும்படி கேட்டேன்...!''

"டாக்டர் என்ன சொன்னார்?''

"முதலில் தம்முடைய பீஸைக் கொடுத்து விடும்படி கூறினார்!''

★

கடைக்காரர்:—இதைப் பாருங்கள், ஸார்! இது சுத்தமான கம்பெனியில் நெய்த சல்லை!

வாங்குபவர்:—அது சரி, ஆனால் அதன் மேல் 'பருத்தி நூல் நெசவு' என்று போட்டிருக்கிறதே!

கடைக்காரர்:—அதுவா? அது பூச்சிகளை ஏமாற்றுவதற்காகப் போட்டது, ஸார்!

★

அவர்:—என்னிடம் இருக்கும் சொத்து முழுவதும் நான் மிகவும் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தவை.


இவர்:—அப்படியா? உங்கள் மாமா காலமாகும்போது தம் சொத்து முழுவதும் உங்கள் பேரில் எழுதி வைத்துவிட்டுப் போனதாக அல்லவா கேள்விப்பட்டேன்? இதில் நீங்கள் கஷ்டப்பட்டது என்ன இருக்கிறது?

அவர்:—ரொம்ப நன்றாயிருக்கிறது! வக்கீல்களிடமிருந்து அந்தச் சொத்தை அடைவதற்கு நான் பட்ட கஷ்டம் உனக்கல்லவா தெரியும்?

★

ஒரு குளத்தில் ஒருவன் விழுந்து இறந்து விட்டான். போலீஸார் புலன் விசாரித்தார்கள். பலர் பல அடையாளங்களைச் சொன்னார்கள். அவர்களில் ஒருவன் சொன்ன பதிலாவது:—

"அவன் திக்கித் திக்கிப் பேசுவான், ஸார்!''



விறகு லாபம்
சமய லாபம்
பண லாபம்
வறுக்கிறது..
வேகவைக்கிறது..
கொதிக்கவைக்கிறது..
பொரிக்கிறது..
ரூ. 43-12-0
விடார்
எலெக்ட்ரிக் குக்கர்
✦ செலவு குறைவு ✦ சிக்கனம்
✦ இனிமேல் அடுப்பு மூட்டும் தொல்லையேயில்லை!

SUNSHINE

Glaxo

ஸன்ஷைன் கிளாக்ஸோ

குழந்தைகளை புஷ்டியாக வளர்க்கிறது

இந்தியாவில் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:

எச். ஜே. பாஸ்டர் & கோ., லிட்.

பம்பாய் - கல்கத்தா - மதராஸ் - லாகூர்

குழந்தைகள் பராமரிப்பைப் பற்றிய சிறிய புத்தகம் 4 அணுவுக்கு ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் பெயரையும் விலாசத்தையும் எச். ஜே. பாஸ்டர் & கோ. லிட்., த. பெ. 202, பம்பாய் என்ற விலாசத்திற்கு அனுப்புங்கள்.

இந்தியாவின் மிகப் பிரபல ஔஷதம்

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்



வலியை விரைவில் போக்கடிப்பது!

நரம்பு நோய், கீல் வாயு, வாயுப் பிடிப்புகள், பல்வலி, சுளுக்கு அல்லது தலைவலி நீங்க மிகச் சிறந்ததான இந்த லிட்டில்ஸ் ஓரியண்டல் பாமை வாங்குங்கள். அதனால் அதிகப்படி செலவில்லை.

தயாரிப்பவர்கள்: லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மசூடிகல்ஸ் லிமிடெட்
தபால் பெட்டி நெ. 67 :: மதராஸ்

DJK 19

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119. Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras.

கல்கி



KALKI ஜூன் 8, 1947 4 அணா

REGD. No M. 4392

License No. 18
Licensed to post without prepayment

